Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.


| மலர் கஉ | பிரமாதி ஆண்டு ஆடித் திங்கள் 1939ஆ ஜூலைமீ | இதழ் எ |
|---|---|---|


## வடதிருமுல்லைவாயிலும் பாலிநதியும்

[திரு. ஈ. க. தணிகாசல முதலியார், B.A., B.L.]

திருவாளர் தியாகராஜப் பிள்ளையவர்கள் சென்ற சித்தாந்தப் பத்திரிகையில் 262-ம் பக்கத்தில் எழுப்பிய ஆராய்ச்சிக்கு விடை :—

பல ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை வழக்கறிஞர் சபை அங்கத்தவர்களுக்குத் திருவாளர் - திவான்பகதூர் மாசிலாமணிப் பிள்ளையவர்கள் வடதிரு முல்லைவாயிலில் ஓர் அரிய பெரிய விருந்தளித்தனர். அவர் வேண்டுகோளுக் கிணங்கி யானுஞ் சென்றனன். வன்றொண்டர்,

"சந்தன வேரும் காரகிற் குறடுந் தண்மயிற் பீலியுங் கரியின் [டுந்தி
தந்தமுந் தாளக்குவைகளும் பவளக் கொடிகளுஞ் சுமந்துகொண்

வந்திழி பாலி வடகரை முல்லை வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே "

எனப்பாடிய நதி, மாசிலாமணியீசனார் கோயிலுக்குச் சமீபத்திலிருக்க வேண்டுமாதலால், அத்தகைய நதியாகிலும் வேறு நீரோட்டக்கால்வாயாகிலும் அவ்வூரிலுண்டோ என்று பலரைக் கேட்டேன். அக்கோயிலுக்குத் தெற்கில் சுமார் அரைமைல் தூரத்தில் பச்சைமலையம்மன்கோயிலுக்கு எதிரிலுள்ள பொய்கை யொன்றே அவ்வூரின் பெரிய நீர்நிலை யென்றும், நீரோடை யொன்றும் அவ்விடத்தில்லை யென்றும் மொழிந்தனர். அக்கோயிலினருகே சென்றிட்டேன். சாக்கியப்பள்ளியா யிருந்ததைச் சைவர் கைப்பற்றி ஒருபுறம் சிவபெருமான், பார்வதி, கணபதி, முருகர் முதலியோர் சந்நிதிகளைக் கட்டியும், சாக்கிய முநிகளின் நாமங்களை மாற்றிச் சைவ இருடிகள் பெயர்களைப் புனைந்தும் வெகு வேடிக்கையான மாறுதல் செய்யப்பட்டிருப்பதைக் கண்ணுற்றேன். ஒருபுறம் அவ்வூர்த் தேவதையாகிய பச்சைமலையம்மன் விக்கிரகமும் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இப்புத்த பள்ளி சிவஸ்தலமானதன் காரணம், திருநாவுக்கரசு நாயனார் திருவொற்றியூரினின்று மேற்கே ஒரு நதிக்கரை வழியாய்த் திருப்பாசூருக்குச் சென்ற காலத்தில், அவரால் அப்பிரதேசம் சிவபற்றில் ஆழ்ந்த தென்பதும், அனுமானிக்கலானேன்.

" சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்
டருளிய இறைவனே "

என்று மாசிலாமணி யீசனாரை நம்பியாரூரர் புகழ்ந்தவாறு பௌத்தமத மழிந்த பின்னர் இத்தலம் புகழ்பெற்ற

தென்றும் தொண்டைமான் கட்டிய கோயிலே நம்பியாரூரரால் பாடப்பெற்ற பதியெனவும் அநுமானிக்கலானேன். இக்கோயிலுக்குத் தென்புறத்தில் பாலியென்னும் ஒரு நதியோடியிருந்தது உண்மை. அது பாலாறாகாது. பாலாற்றிற்கும் இக்கோயிலுக்கும் எட்டு மைல்தூரம் உண்டு. அக்காலத்தில் பாலாறில்லை யென்பதை வற்புறுத்தத்தக்க ஆதரவுகளில்லை. கீழ்க்கடற் கரையிலுள்ள தலங்களைத் தரிசித்துச் சென்ற நமது சமயகுரவர்கள், மேற்குத் திசையில் சென்று அவ்வழியிலுள்ள சிவத்தலங்களைத் தரிசிக்கச் செல்லும்போது மேற்கினின்று கிழக்கே வரும் நதிகளின் கரையோரமாகவே சென்றதாகப் புலப்படுகின்றது. சம்பந்தர் மயிலாப்பூரை விட்ட பிறகு பாடி (திருவலிதாயம்) சென்று, பிறகு திருவேற்காட்டை யடைந்து, பின்னர் கூவம், திருஇலம்பையங்கோட்டூர் முதலிய பதிகளை யடைந்தார். அவற்றிற்குப் பாலாற்றின் தென் கரையே வழிப்போக்குக்குப் பயன்பட்டது. அவ்வாறே வன்றொண்டரும் திருநாவுக்கரசர் திருவொற்றியூரினின்று மேற்கே சென்ற வழியே பின்பற்றலானார். அது பாலியாற்றின் வட கரையாகும். பாலியாறு, திருவொற்றியூரின் தென்புறத்தில், கடலில் கலந்தது, அவ்விடத்திலிருந்த பெரிய நீண்ட மணல்வெளியே சான்றாகும். இது கலக்குமிடத்திற்கும் மயிலாப்பூருக்கும் உள்ள தூரம் மேற்கு முகமாகச் செல்லச்செல்ல அதிகமாய் வளர்ந்து கொண்டே போயிற்று. ஆதலால் பாலாற்றிற்கும் பாலிநதிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

பாலாறு வட ஆற்காடு ஜில்லாவிற்குத் தென் மேற்கிலுள்ள மலைத்தொடர்ச்சியில் உற்பத்தி பெறுவது. இதன் நீரின் வெண்மையால் பால் நிறம் சில காலங்களில் பொருந்தும். இது பெரும்பாலும் சமபூமியில் ஓடுவது. ஆதலால்

இதுதான் பாலியென்று திருமுல்லைவாயில் கோயில் குருக்கள் மொழிந்தும் யான் நம்பவில்லை. பிறகு அந்நதி இருந்த இடம் இதுதானென்று யான் அறிந்துகொள்ளத் திருவருள் பிறக்குமோ எனச் சிந்திக்கலானேன். அந்நாள் முழுவதும் ஊரெங்குந் திரிந்தும் சிவபெருமான் அருளுதிக்கவில்லை. மாலையில் மோடார் வண்டி ஆவடி ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல நேராமையால், கால் நடையாய் நானும் என் நண்பர் சிலரும் குறுக்கு வழி பற்றினோம்; இது காட்டுப் பிரதேசமானதும் ஆழ்ந்து அகண்டதுமான கணவாயொன்றில் கொண்டுபோய்விட்டது. நுண்ணிய செம்மண் நிறைந்த இத்தரை ஆற்றடியாயிருக்குமோ எனச் சந்தேகித்துக் கிளறிப் பார்த்ததில் அக்கணவாய் எப்புறத்திலும் மணலைக் கண்டெடுத்தோம். இப்பள்ளத்தாக்காய்ச் செல்லும் கணவாய், கிழக்கே திருவொற்றியூரை நோக்கியும் மேற்கே தண்டரைக்காட்டை நோக்கியுஞ் சென்றது. ஆவடிக்கு வடக்கிலுள்ள தண்டரைக் காட்டில் ஒருவிதக் காட்டாறு சென்ற அடி யின்னுங் காணலாம். அது திருஎவ்வளூருக்கு வட புறமாய்த் திரு வெண்பாக்கம் (திருவுளம்பூதூர்) மார்க்கமாய்ச்சித்தூர் ஜில்லா நாராயணவனம் தாலுக்காவிலுள்ள மலைகளுக்குச் செல்கின்றது.

அம்மலைகளில் இப்போது யானைகளில. மூங்கிற்காடுகளுள. முதிர்ந்த கள்ளிச்செடிகள் ஏராளமாதலால் அவை அகிற்கட்டைகளாய் வெள்ளத்தில் வருவது சாதாரணமே. மயில்களும் இக்காட்டில் உள. சந்தன மரங்கள் ஏகதேசம் இப்போதிருப்பதால் அக்காலத்தில் ஏராளமாய் இருந்திருக்கலாம். ஆயினும் பவளக்கொடிகள் அங்கு விளைவதில்லை. செம்மண் இந்நதியாய் வந்து அம்பத்தூர் மேடுகளாய் நின்றிருந்தன. அவை சில வருஷங்களுக்கு முன்னர் இருப்புப்பாதை அதிகாரிகளால்

அழிக்கப்பட்டன. இத்தகைச் செம்மண் அரிய நுண்ணிய பொடிகளாய் அக்காலத்தில் பாலி நதியில் நிறைந்திருப்பின் அக்கரையோரத்தில் விளையும் "பங்காருவாளை" என்னும் ஒருவகைச் செடி இச் செம்மண்ணால் மூடப்படின் அவை பவளக் கொடிகள்போல் திகழ்ந்திருக்கலாம். ஊரார் பவளக்கொடிகளை ஆற்றில் விடும் வழக்கம் எக்காலத்திலுமில்லை. தடாகங்கள் முதலிய நீர் நிலைகளில் தாமரை முதலியன விடுவது வழக்கமன்றி அந்நீர் நிலைகளிலும் பவளக் கொடிகளைவிடும் வழக்கம் எந்நூலிலும் காணப்படவில்லை.

ஆதலால் பாலியாறு திருமுல்லைவாயிற் கோயிற்குத் தென்புறத்தில் ஓடிய ஒருவகைக்காட்டாறென்றும், அது இப்போது பல்வகைக் காரணங்களால் இறந்ததென்றும், நாம் அநுமானிக்கலாம். "பாலி" என்னும் பதம், சாக்கியர் வேதத்தை வளர்த்ததொரு பண்டைக்காலத்திய மொழியாதலால், அம்மொழியின் பெயரைப் பச்சை மலையம்மன் கோயிலென்று இப்போது வழங்கும் அக்கால புத்தப் பள்ளியின் முனிவர்கள் இட்ட செல்வப் பெயராயிருக்குமோ என்பதும் சந்தேகம் கொள்ள இடந்தருகின்றது. இதனை அறிஞர் ஆராய்வாராக.

# ஆணவம் கொண்டார் ஆட்சியை அடையார்

[ஜி. சுந்தரமய்யர்]

**பெ**றுதற்கு அரிய பிறவியைப் பெற்று வாழ்நாளை வீணாகக் கழிப்பது மதியீனமாகும். அருமையான மனிதப் பிறப்பு கிடைப்பது துர்லபம். "காற்றுள்ளபோதே தூற்

றிக்கொள் " என்றபடி மனிதப் பிறப்பின் முக்கிய குறிக்கோளாகிய முத்தி வீட்டை அடைய வஞ்சகமில்லாமல் முயற்சி செய்யவேண்டும். " இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால், மனித்தப்பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே," என்ற சமய குரவர்களின் பெருமொழி மனிதப்பிறவியின் இலட்சியத்தைத் தெளிவாய் வற்புறுத்துகிறது. ஈசனடி நிழல் சேர்வதே முத்திப் பேறடைவதாம். மனிதப் பிறவி கிடைத்தும் ஈசன் சிற்றடியை - சேவடியை-மாணடியைக் குறுகிப் பணிந்து பெறக்கற்காமல் பொழுதைப் போக்குவதைக் காட்டிலும் மிருகமாய்ப் பிறத்தலே மேன்மை என்று சொன்னால் தவறாகாது.

" ஓரவொட்டா ரொன்றை யுன்ன வொட்டார் மலரிட்டுனதாள் சேரவொட்டாரைவர் செய்வதென்யான் " என்று விம்மி விம்மி யழுது ஏங்கினார் அருணகிரியார். ஐம்பெரும் பூதவாயின் அகப்பட்டு விழிக்கிறோமல்லவா? மனிதப் பிறப்பின் இலட்சியம் அறிவோம். அது மனிதனால்தான் செய்யத்தகுந்தது அதாவது செய்ய முடிந்ததென்றும் அறிவோம். ஆயினும் இம்முயற்சியில் தீவிரமாய் முயலும் மனிதர்கள் மிகவும் சிலர் என்பது நாம் கண்கூடாகக் கண்டசெய்தியாம். காரணமென்ன ? தனியிடத்தில் அமர்ந்து நிதானமாய் யோசித்துப் பார்ப்போமானால் நமது வாழ்வில் நம்மைப் பலவிதமான பேய்கள் பிடித்துக்கொண்டிருக்கின்றன என்று அறிவோம். ஆசை என்கிற ஒரு பிசாசு நம்மைப் பிடித்துக்கொண்டு ஆட்டுவிக்கின்றது. பெண்ணாசை மண்ணாசை பொன்னாசை இவைகளைத் தவிர, குரோதம் (கோபம்) உலோபம் மோகம் மதம் மாற்சரியம் (பொறாமை) இவைகளாற் கொள்ளப்பட்டு மதியை இழந்து வாழ்நாள்களை வீணாக்குகிறோம். இவ்விகாரங்களெல்லாம் ஏற்படுவதற்கு மூலத்தானமாயிருப்பது மனமேயாகும். மனம்

என்பது ஆண்டவன் நமக்கு அளித்த ஒப்பற்ற கருவி. அதை நல்வழியிற் செலுத்தி நல்ல பழக்கங்களில் அப்பியாசப் படுத்தி விடுவோமானால் மனத்தைப் போல் பெருத்த சாதனம் வேறு ஏதும் இல்லையாம். ஆனால் மனம் போனபோக்கெல்லாம் சென்று மனத்தாலாளப் பட்டு விடுவோமானால் நாம் மனப்பேயால் ஆட்டப்பட்டுப் படுகுழியில் விழுவோம் என்பதற்குச் சந்தேகமில்லை. இன்னும் "யான்" என்கிற ஆணவப்பேயாலும் எனது என்கிற இராட்சதப் பேயாலும் பிடிக்கப்பட்டிருக்கிறோம். "யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம் புகும்" என்று தமிழ் வேதம் அறுதியிட்டிருக்கிறது. ஆகவே, இப்பேய்கள் இரண்டும் நம்மை விட்டு அகன்றால் வீட்டுப் பேற்றையடையலாம். இப்பேய்களைத்தான் அகங்காரம் மமகாரம் என்று நூல்களில் காண்கிறோம். ஆகவே "நான்" என்கிற அகம்பாவம் ஒழியவேண்டும்.

மனம் என்பது ஒன்றே; நல்ல மனம் என்றும் கெட்ட மனம் என்றும் இரண்டு மனங்களில்லை. சுபாவத்தில் மனதிற்குத் தோஷமிருப்பதாகச் சொல்ல முடியாது. சுபவாசனை வயத்ததாய் நிற்கும்போது நல்ல மனம் என்றும், அசுபவாசனை வயத்ததாய் நிற்கும் போது கெட்ட மனம் என்றும் உலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. விருப்பு வெறுப்பில்லாமல் அன்னியர்கள் காரியத்தில் பிரவேசியாமல் நமது கடமைகளைச் செய்து வருவோமேயானால் மனத்தை நன்னெறியில் நிற்கச் செய்யலாம்.

ஆணவம் சிறிதளவு தங்கியிருப்பினும் ஜீவனுக்கு விமோசனமில்லை. ஆகவே அதை வேரறக்களைய வேண்டும். ஆணவம் என்றால் என்ன ?

இவ்வுலகம் ஆணவ நிவர்த்தியின் பொருட்டு முத்தொழிற்படுமென்றும் தோற்றம், திதி, ஒடுக்கமாகிய இவ்

வியல்பு உயிர்கள் பயன் அடைதற் பொருட்டே என்றும், வியாபகமுள்ள உயிரை அணுத்தன்மை அடையச் செய்வதால் ஆணவம் எனப்படும் என்றும், உயிர் தனுகரணாதியின் உதவியைக் கொண்டு ஆணவத்தடையைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்றும் உணருகிறோம். ஆகவே, ஆணவம் மூலமலமாகிறது. இக்கட்டோடு நாமுலகில் வந்திருக்கிறோம். இக்கட்டை அவிழ்ப்பவன் ஈசன். ஈசனுக்குப் பசுபதி என்ற பெயர் ஒன்றுண்டு. மாட்டை இஷ்டப்படி விட்டுவிட்டால் பிறன் வயலில் போய் மேயும்; அடிபட்டு வருந்தும்; கிணற்றிலும் விழுந்துவிடும. அதன் நன்மைக்காகவே நாம் அதைக் கட்டிப் போடுகிறோம். அதுபோலவே, பசுபதி, பசுக்களாகிய நம்மை இக்கட்டிலிட்டு வைத்திருக்கிறார். இக்கட்டிற்குப் பாசம் என்று பெயர். எப்பொழுது ஈசன் நம்மை இக்கட்டிலிருந்து அவிழ்த்து விடுவார் என்று சிந்திப்போமானல் நாம் ஒருவருக்கும் ஒன்றும் பண்ணமலிருந்தால் அவிழ்த்து விடுவார் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும். இதைத்தான் 'சும்மாயிருத்தல்' 'இருந்தபடி யிருத்தல்' என்று நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நிலை நமக்குவர முயற்சிசெய்ய வேண்டும் இதற்காகவே உடல், மனம், புத்தி, விவேகம், பகுத்தறிவு முதலிய சாதனங்களைக் கடவுள் நமக்கு உதவியிருக்கிறார். என்றைக்கு நாம் துன்பத்தையும் இன்பத்தையும் விருப்புவெறுப்பின்றிக்காணுவோமோ, அன்றைக்குத்தான் ஆணவமலத்தின் சக்தி குறைந்தொழிவதை உணருவோம். ஈசன் திருவருளானது ஆன்மாவில்வந்து பதிந்ததாகவுங் கொள்ளலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நான்கு சாதன முறைகளால் அடையக்கூடிய ஆன்மலாபங்கள் மேற்கண்ட மூன்றுமே என்று ஒருவாறு உறுதியாய்ச் சொல்லலாம். நாமெல்லாம் பசுபதியின் குழந்தைகள். விஷமம் அல்லது

சேட்டை செய்யும் சுபாவம் உள்ளவர்களாதலால் நம்மை ஈசன் கட்டிப்போட்டிருக்கிறார், என்று நாம் நமது உண்மையான நிலையை அறிந்து இயற்கைக்கு விரோதமில்லாமல் நடக்க முயல்கிறோமோ, நமது கட்டானது நெகிழ்த்தப்பட்டு கடைசியாக அவன் திருவருள் உறுதியாய்ப் பதிந்து நம்மிடத்தில் குடியாயிருக்குமோ அன்றுதான் நாம் விடுதலை அடைவோம்.

சைவசாத்திரங்களிலும், சாக்த சாத்திரங்களிலும் பதி பசு, பாசம் என்ற முப்பொருள்களைப் பற்றியும் சொல்லப் பட்டிருக்கிறது. இவைகளைத் தான் ஜீவன், பரமாத்மா, மாயை என்று பேசும் அத்வைதமாகிய வேதாந்தம். வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பல்வகையில் வேறுபாடுகளிருக்கின்றன என்று புலவர்கள் வாதம் செய்வார்கள். ஒன்றைவிட மற்றொன்று சிறப்பானது என்கிற கிளர்ச்சி வாதங்களும் அடிக்கடி நாம் கேட்பது உண்டு. உலக பிதா ஒருவன்தானே. சமரசத்தை உணருவது தான் நன்மையை விளைவிக்கும்,

"யான், எனது" என்பவைகளைக் குறள் ஆசிரியர் "செருக்கு" என்று உரைத்தார். உரையாசிரியர் பரிமேலழகர் 'செருக்கு' என்பதை மயக்கம் எனப்பொருள் படுத்தினார். மருளினால் உண்டாவது மயக்கம். அதை ஒரு விதத்தில் அறியாமை அஞ்ஞானம் என்று சொல்லலாம். 'மாயை' என்கிற வஞ்சகப் பேயால் பிடிக்கப்பட்டகாலை, தானல்லாத உடம்பை 'யான்' என்றும் தன்னோடு சம்பந்தமில்லாத பொருளைஎனதென்றும் நினைத்து அறியாமையாலே மயங்கி மயக்கத்தில் அழுந்தித் தள்ளாடி வாடிப் பதைக்கிறோம். இவ்விரண்டு பற்றினையும் விட்டார்க்கே வீடு கிட்டும் என்பது தமிழ் வேதம். "யான் எனது" என்ற இரண்டும் ஒன்றாக் கொன்று தொடர் புடை

யன. 'யான்' ஒழிந்தால் 'எனது' நீங்கும். 'எனது' நீங்கினுல் 'யான்' இருந்தவிடம் தெரியாமல் மறையும். "அகம் பிரமம்" என்ற வேதாந்த வழியின் உண்மையாதெனின் அநாத்ம அகங்காரத்தை ஆத்ம அகங்காரத்தால் முற்றும் நசிப்பிக்கச் செய்து "யான்" என்ற அகம்பாவம் முழுவதும் அகன்று மமதையையும் ஒழிப்பதாகவும், காலில் தைத்த முள்ளை முள்கொண்டு எடுப்பதுபோலும், நீரிலுள்ள அழுக்கைத் தேற்றாங் கொட்டைப் பொடி சுத்திசெய்து தானும் நீரில் கலந்து விடுவது போலுமாகும். சித்தாந்த வழியில் நமக்குக் கிடைக்கும் உண்மை யாதெனில் "எல்லாம் இறைவன்செயல்'! என்று நல்லதையும் கெட்டதையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விடுவதே.' அப்போது "எனது" என்னும் செருக்கு ஆதியில் போய் பிறகு யான் எனும்அகம்பாவம் நீங்குகிறது. ஒரு சிறுகதை ஞாபகத்திற்கு வருகிறது. ஓர் ஏழைப் பிராமணன் ஒவ்வொரு நாளும் காடு சென்று விறகு வெட்டி அதை விற்று, வந்த பொருளைக் கொண்டு ஜீவனம் நடத்திவந்தான். ஒருநாள் விறகுவெட்டும் போது கோடரி மரத்தின் மறைவில் மேய்ந்த பசுவின் பேரில் பட்டுப் பசு இறந்து போய்விட்டது. 'கோஹத்தி பிடித்துக் கொண்டதே' என்செய்வது என்று அந்தணன் நடு நடுங்கி மயங்கினுன். 'அந்தப்பாவத்தை நான் வாங்கிக் கொண்டேன்! அந்தணனே! பயப்படாதே' என்ற அசரீரி உண்டாயிற்று. அந்தணன் கவலையின்றி வீடுபோய்த் தன் வேலையைச் செய்து கொண்டு வந்தான். பல வருடங்கள் சென்றன. அந்தணன் சிறிதுபொருள் சேர்த்துக்கொண்டான். தனக்குக் கல்யாணம் தீர்மானஞ் செய்துகொண்டு அதற்கு வேண்டியவைகளைச் செய்து வந்தான். விவாக நாள் வந்தது. அன்று கண்களில் சரியாய் வெளிச்சமில்லாத தொண்ணூறு வயதுள்ள தொண்டு கிழவன் கல்யாண-

வீட்டை விசாரித்துக்கொண்டு வந்து சேர்ந்தான். கல்யாண மாக வேண்டிய பிராமணனை நோக்கி "கல்யாணம் யாருக்கு?" என்று பன்முறை வினவ, "எனக்கு எனக்குத்தான்" என்று மொழிந்தானும். "கோஹத்திபாவம் எனக்கு, கல்யாண சுகம் உனக்கா?" என்ற வாக்குக் கிளம்பிக் கிழவரும் மறைந் தாராம். பிராமணனுக்கு ஞான உதயமாய் யாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணஞ் செய்து நற்கதி அடைந்தான் என் பதுதான் நான் சொல்ல உத்தேசித்த கதை. இருவழியில் செல்லுபவர்களும் முடிவில் சொரூப சாக்ஷாத்காரத்தை அடைகிறார்கள். பெத்த உயிர் முத்த உயிர் ஆகிறது.

"நான் பெரியன்" என்று எழும் உணர்ச்சி நன்மை யைத் தராது; கேடுகளுக்குத்தான் முக்கிய காரணமாகும். இந்தக் குணம் நமக்கில்லாமல் செய்து கொள்ளவேண்டும். "யான் அவனுக்கு அடிமை என்பதை இடைவிடாமல் ஞாப கத்தில் வைத்து இத்துர்க்குணத்தை மாற்றவேண்டும்." என்னைத் தடுப்பவன் யார்? நான் இதைச் செய்தே முடிப் பேன்" என்று அகங்காரத்தினால் தோன்றும் எண்ணங்களை 'எடுத்த கருமங்களாகு நாளன்றி ஆகா, அவன் அருளின்றிச் செய்து முடிக்கு மாற்றலெனக் குளதோ' அவனன்றி அணுவும் அசையாது, ஆட்டுவிப்பவன் ஆட்டுவது போல் ஆடவேண்டும்' என்ற உண்மைகளை மறத்தல் மயக்கமாகும். இவ்விதத்தில் மெல்லமெல்ல வாழ்நாள்களைச் சீர்படுத்திக் கொள்வோமானால் இறைவனுக்கு ஆத்ம சமர்ப்பணம் செய் யும் நிலையையும் அடைவோம். இந்நிலையைத் தாயுமானவர் மிகவும் உருக்கமாயும் தெளிவாயும் பாடுகிறார்.

"எனக்கெனச் செயல் வேறிலை யாவு மிங்கொருவின்
தனக் கெனத்தகு முடல்பொரு ளாவியுந் தந்தேன்

மனத்த கத்துள வழுக்கெலா மாற்றியெம் பிரானீ
நினைத்த தெப்படி யப்படி யருளுத னீதம்."

ஆணவம் என்பதற்கு நான் ஒரு வகையில் பொருள் செய்யத் துணிகின்றேன். 'ஆட்சி' என்றால் ஆண்மை, ஆளுகை என்ற பொருள் உண்டு. இது மனிதனின் உரிமையாகும். மனிதனாகப்பிறந்த ஒவ்வொருவனும் பகவானது பாதாரவிந்தத்தை அடைவதே அவனது உரிமையாகும். அதுதான் ஆண்மையாகும். தன்னை அறியவேண்டும். அவனோடு இரண்டறக் கலக்கவேண்டும். இந்நிலை கிட்டாவிட்டால் "உயிர் அவமேபோம்" என்று முறையிட வேண்டியதுதான், ஆகவே ஆணவம் என்பதை ஆண், அவம் என்று இரண்டு சொற்களாய்ப் பிரித்து மனிதப் பிறப்பின் உரிமையாகிய ஆட்சியை (ஆண்மைத் தன்மையை) அவமாக்குவதால் ஆணவம்என்று ஆன்றோர் மூல மலத்திற்குப் பெயர் கொடுத்தனர்களோ என்று நான் ஊகிக்கிறேன். அருணகிரியாரும் திருப்புகழில் "அவமே பிறந்த எனை யிறவாம லன்பர்புகு மமுதாலயப் பதவி யருள்வோனே" என்றருளியுள்ளார்.

உயிர் தன்னியல்பு அறியாமல் கருவிகளால் மயங்கி நிற்கும் வேளையில், கருணைக்கடலாகிய சிவம் உயிர்க்கு அதன் இயல்பை உணர்த்தும். மலங்களைப்போக்க சிவஞான போதத்தில் கைகண்ட சாதனமாக அஞ்செழுத்தைச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆணவப் பேயை ஓட்ட மருந்து அஞ்செழுத்தே. அனுபானம் திருநீறு. நீற்றை நிறையப் பூசியும் அஞ்செழுத்தைச் சதா சொல்லிக்கொண்டும் வந்தோமானால் ஆணவப் பேய் நம்மை அணுகாது; நாடாது. 'நமச்சிவாய' என்று சொல்லிக்கொண்டு வந்தால் சிவோகம்பாவனை ஏற்படும். இப்பாவனையில் முற்றிய உயிர் சிவத்தின் ஞான சொரூபத்தைக் காணும். தன்னியல்பை அறிந்த உயிர் தன்னுள்ளே பொருந்திய சிவத்தை நாடி (ஊனக்கண்

காணாது) அடைவதே சிவோகம்பாவனையின் முடிவான பயனாகும். "நான் கேவலம் உயிர் (ஜீவன்) அல்ல; நான் சிவம்; சிவம் என்னிடத்தில் உளது" என்ற சந்தேகமில்லா உறுதிப்பாடே அதாவது ஞானமே ஆணவமுனைப்புச் சிறிதுமில்லாமல் அழிவதற்குக் காரணம் என்று முடிவு செய்துகொள்ள வேண்டும்.

அருணகிரியார் கந்தரலங்காரத்தில் சத்தியம் எப்போது யாருக்குத் தோன்றும் என்பதை விளக்குகிறார். அதை நேயர்களுக்கு ஞாபகப் படுத்திவிட்டு இக்கட்டுரையை முடிப் போம்.

"யான்றா னெனனுஞ் சொல்லிரண்டுங் கெட்டாலன்றி யாவர்க்குந் தோன்றாது சத்யம்." நாம் இந்த உண்மை வாக்கியத்திலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியதென்ன? சிவோகம்பாவனை செய்யுங்காலை "நான் வேறு; சிவம் வேறு" என்ற பாவனை ஒழிய வேண்டும், உபாசிக்கிறவன் வேறு; உபாசிக்கும் தெய்வம் வேறு என்ற பாவம் போக வேண்டும். ஆரம்ப காலத்தில் வேறாகத்தான் தோன்றும். பாவனை முற்ற முற்ற வேற்றுமை விட்டுப் போகும். நாம, ரூப, வித்தியாசங்களெல்லாம் நீங்கப்பெற்று அனைத்தும் "சிவம்" எனக் காண்போம்.

"தெய்வம் வேறு; நான் வேறு" என்று எவன் உபாசிக் கிறானோ அவன் பசு. அந்தத் தெய்வமே நான் என்று அறிந் தவன் பசுஅல்ல. உபாசனம் ஒருசடங்கு. ஒருகருமம். அதி லிருந்து கிடைக்கும் பயன் அறிவு. உபாசனத்தில் பாவனை முற்றமுற்ற நமக்குக் கிடைக்கும் பயன் சொல்லொணாதது. சிவோகம் பாவனை வலுக்க வலுக்க "நான்" என்பது மடிந்துபோய் ஈஸ்வர சாக்ஷாத்காரத்தில் இரண்டறக் கலந்து விடுகிறது. பொல்லா நானும், நல்ல நானும், எல்லாம் மறைந்து போகும். கைவெட்டுப்பட்ட தையலுக்கு முருகா

என்றவுடன் கைமுளைத்ததாம். முருக பாவனையின் வலிமையைத் தான் விளக்குகிறது. "நானாக ஆகி இரு. அவிழ்த்து விடுகிறேன்" என்று பதியாகிய பகவான் பசுக்களாகிய ஜீவர்களைப் பார்த்துச் சொல்கிறார் என்று எனக்குத் தோற்றுகிறது. அவனாக ஆவதற்கு முயற்சித்தால் ஆணவம் தொலையும்; ஆட்சி பெறலாம். நரசிங்கப்பெருமாள் பிரகலாதனுக்கு வரங்கள் கொடுத்ததை வரகவி கம்பர்,

"நல்லறமு மெய்ம்மையு நான்மறையு நல்லருளு, மெல்லையின் ஞானமு மீறிலா வெப்பொருளும், தொல்லை சாலெண்குணனு நின்சொற்றொழில் செய்க, வல்லவுரு வொளியாய்! நானுவளர்கநீ" என்று கூறினார். பதியைப்போல் சிறப்புற்று வாழ்தலும் பசுக்களால் முடியும் என்பது திண்ணமாதலால் மனிதப் பிறப்பில் அடையவேண்டிய ஆட்சியை அடைவோமாக. அவனுக்குள்ளதெல்லாம் நம்மிடத்தில் சிறிதளவில் இருக்கிறதென்றால் ஆட்சேபணைக்கு இடமேயில்லை. அன்னியப் பொருள்களை நாடி உயிரைப் பின்போக்காய்ச் செலுத்தாமல் நம்மிடத்தில் இருக்கும் அவனை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து ஆனந்த வாழ்வில் இருப்போமாக. சுபம்.

# திருவாரூரர்

[P. தியாகராஜன் B. A., L. T.]

## XVII

## சுந்தரரும் இயற்கை விரியும்

### கடல்

**வணக்கம்**

*இன்றொண்டைக்கனிச் செவ்வாயெழிற் பரவை மணம் புணர்ந்து*
*மென்றண்டக் குளிர்நிலவு விரவுசடையுடைப் பெருமான்*
*றன்றொண்டர் தனித்துறவு தரித்ததலக் கிழமை பெறும்*
*வன்றொண்டரடிக்கமல மறவாது மனங்கொள்வாம்*

**—திருக்கோவலூர் புராணம்**

1. சுந்தரர் நெடுநாள் கடலோரத்திலுள்ள திருவொற்றியூர், திருவஞ்சைக் களம், நாகை, திருமறைக்காடு முதலிய விடங்களில் வாழ நேர்ந்ததால் கடற்கரையையும் கடலையும் அங்கு நிகழ்வனவற்றையும் நன்கு எடுத்துக் கூறினார். அவர் கீழ்க்கடல், தென்கடல் மேற்கடல் ஆகிய மூன்றையும் நேரே கண்டவர். கடற்கரையிலுள்ள கோவில்களைப் பாடும் போது கடலையும் சேர்த்துப் பாடினர். திருவஞ்சைக் களப் பதிகத்தில் (4) மேற்குக் கடலைப்பற்றிப் பின்வருமாறு குறித்தார். "மலைக்கு நிகரொப்பன வன்றிரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண், டலைக்குங் கடலங்கரை மேன் மகோதை", "மடித்தோட்டந்து வன்றிரை யெற்றியிட வளர்சங்கமங்காத்து முத்தஞ் சொரிய அடித்தார் கடலங் கரை", "சந்தித்தடமால் வரை போற்றிரைகள் தணியாதிடறுங் கடலங்கரை" "மழைக்கு நிகரொப்பன வன்

றிரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டேழக்குங் கடலங்கரை மேன்மகோதை", "தொடுசங்க மோடிப்பி முத்தங் கொணர்ந்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டரவக் கடலங்கரை மேன்மகோதை", "நோக்கு நிதியம் பல வெத் தனையுங் கலத்திற் புகப்பெய்து கொண்டேற நுந்தி ஆர்க்குங் கடலங்கரை மேன்மகோதை", "அடிக்கின்றன போற் சில வன்றிரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டடிக் குங்கடலங்கரை மேன்மகோதை" என அக்கடற்கரையில் தாம்கண்ட காட்சியினைப் பொறித்திட்டார். அங்கு பேரலைகள் மலைபோல உயர்ந்தெழுந்து இடைவிடாது அடிக்கின்றது போல் கரைமேல் ஓங்கி அறைந்து பேரிரைச்சல்செய்தலையும் அவ்வலைகளில் சிக்கிக் கொண்ட வலம்புரியும் இப்பியும், வலிபொறாது அங்காந்து முத்துக்களைக் கக்குவதையும் சங்குகள் ஒலிப்பது கடல்சங்கத்தை ஊதி எல்லாரையும் அழைப்பது போலிருப்பதையும் அழகாக வரைந்தார். அந் நாளில் தமிழ்நாடு சோனகம், யவனம் முதலிய வெளிநாட் டோடு வணிகம் மிகுதியாய்ச் செய்தது. பெரும்பாலும் துறைமுகங்கள் மேற்கடற்கரையில் இருந்தன. அங்கு கப் பல்கள் விரும்பப்படும் பல பொருள்களை நிரப்பிக்கொண்டு வருவதையும் குறித்தார். அவ்விடத்தில் வலம்புரிச் சங்கு கள் மிகுதியாக இருந்தன என்பதும் தெரிகிறது.

2. கிழக்குக் கடலைப்பற்றி இரண்டு மூன்று இடங் களில் பேசுகின்றனர். திருமறைக் காட்டிற்கருகில் கடலும் கடற்கரையும் எப்படி யிருந்தனவென்பதைப் பின்வரும் பாடல்கள் தெரிவிக்கின்றன:—"முகரத்திடை முத்தினொளி பவளத்திரளோதத், தகரத்திடை தாழைத்திரண் ஞாழற் றிரள் நீழன், மகரத்தொடு சுறவங் கொணர்ந்தெற்றும் மறைக்காடு" (71), "தெங்கங்களும் நெடும் பெண்ணையும் பழம் வீழ் மணற்படப்பைச், சங்கங்களு மிலங்கிப்பியும்

வலம்புரிகளும் இடறி, வங்கங்களுமுயர் கூம்பொடு வணங்கும் மறைக்காடு", "குரைவிரவிய குலைசேகரக் கொண்டற்றலை விண்ட, வரை புரைவன திரை பொருதிழிந் தெற்றும் மறைக்காடு", "பரவ, அங்கைக் கடலருமாமணியுந்திக் கரைக்கேற்ற, வங்கத்தொடு சுறவங் கொணர்ந்தெற்றும் மறைக்காடு", "பாவைக் கடலிடையிடை கழியருகினில் கடிநாறு தண் கைதை, மடலிடையிடை வெண்குருகெழுமணி நீர்மறைக்காடு", "செந்நெல் வளைவிளை வயற் கயல் பாய்தரு குணவார் மணற்கடல்வாய் வளைவளையொடு சலஞ்சலங் கொணர்ந்தெற்றும் மறைக்காடு", "கலம்பெரியன சாருங் கடற்கரை" என அவ்விடத்தில் உள்ள கடற்கரையில் தென்னை, பனை, தாழை, குங்குமமரங்கள், தகர மரங்கள் செறிந்து விளங்குவதையும், தாழையிடையே வெண் குருகுகள் வாழ்வதையும், கடல் தன் அலைகளால் சங்கு, இப்பி, வலம்புரி, சுறுமீன் "கடலருமாமணி" முதலியவைகளைக் கரைக்கு எற்றிக்கொண்டு வருவதையும் கூம்போடு கூடிய வங்கங்களும், பெரிய மரக்கலங்களும், மறைக்காட்டினருகில் கடற்கரையைச் சாருவதையும் பற்றி நன்றாக விரித்துரைத்தார். "மறைக்காடதன் றென்பால்" உள்ள திருக்கோடிக்குழகர் (32) மேல்பாடுகையிலும் அக்கடற் கரையைப்பற்றிப் பேசுகின்றார். அங்குக் கோவில் கடலுக்கு மிக நெருங்கியிருப்பதைக் "கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக்கரை மேல், குடிதான் அயலே யிருந்தாற் குற்றமாமோ" என்னும் தொடர் தெரிவிக்கிறது. மற்றும் கடலருகில் சிவபெருமான் கோவில்கொண்டிருப்பதை அவருக்கும் கடலுக்கும் உள்ள உறவினைக் காட்டுவதுபோல நகைச்சுவைதர,

"முன்றான்கடல் நஞ்சமுண்ட வதனாலோ
பின்றான் பரவைக் குபகாரஞ்செய் தாயோ
என்றான் தனியே யிருந்தாய்"

எனப் பாடினார். அங்கு வேடர்கள் வாழ்ந்தனர் என்பதை

"கொடியார் பலர்வேடர்கள் வாழுங்கரை", "வேடித்தொண்டர் சாலவும் தீயர்" என்ற தொடர்கள் காட்டுகின்றன. வேடர்கள் மலைகளிலும் காடுகளிலும் உறைபவர். கடற்கரையிலும் வேடர்கள் வாழ்ந்தனரோ அன்றி கடலோரத்தில் காடுகள் இருந்தனவோ தெரியவில்லை. மறைக்காட்டின் பக்கத்தில் மற்றைக் காடுகளும் இருந்திருக்கலாம். அல்லது காடு நாடு என்ற வேறுபாடில்லாமல் வேடர்கள் என்ற மக்கட் பகுதியினர் தமிழ்நாட்டின் எப்பக்கத்திலும் உறைந்தனரோ? அப்படி இருந்தால் அவர்களின் வழிவந்தவர் இன்றும் அந்நாட்டில் காணப்படல்வேண்டும். இவைகளையெல்லாம் வரலாற்று நூலார் ஆராய்வாராக.

3. திருவொற்றியூரை யடுத்துள்ள கடலின் பகுதியைப்பற்றிக் "காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே ஓட்டுந் திரைவாய் ஒற்றியூர்" (91) என்று ஒற்றியூர்க் கரைக்கு கலமும் திமிலும் வருவதைச் சொன்னார். கலமும் திமிலும் வேறுபட்ட மரக்கலங்கள்போலும், பழைய நாளில் திருவொற்றியூர்க் கடற்கரை கலங்கள் தங்குந் தகுதியுடையதாக இருந்ததுபோலும். 54-ம் பதிகத்தில் மீண்டும் இவ்வூரைப் பாடுகையில் "சங்கு மிப்பியுஞ் சலஞ்சலம் முரல வயிர முத்தொடு பொன்மணிவரன்றி, ஓங்குமாகடல் ஓதம் வந்துலவு மொற்றியூர்" என்றனர். இங்கு கடலானது சங்கும், இப்பியும் சலஞ்சலமும் ஆகிய கடற்படு பொருள்களைக் கொண்டு வருவது இயற்கையே. ஆனால் வயிரமும் பொன்மணியும் வரன்றி வருகிறதென்பது ஆராயக் கிடக்கின்றது. ஒருகால் மாவயிரத்தையும் அழகிய பாம்புகள் கக்கிய அரதனத்தையும் குறிக்கலாம்.

4. திருவலம்புரம் என்ற திருவூர் கடற்கரையில் உளது. அங்குள்ள கடலை 72-ம் பதிகத்தில் பாடுகின்றார். "பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்.......வலம்புரம்" என்றும், "கொங்கணை சுரும்பு நெருங்கிய குளிரினம் தெங்கொடுபனை பழம்படுமிடம்" என்றும், "தடங்கடற் றிரைபுடைதர எங்கள தடிகள் நல்கிடம்" என்றும், "படுமணி முத்தமும் பவளமும் மிகச்சுமந்திடு மணலடை

கரையிடம்'' என்றும், "நெருங்கிய கெடும்பணை யடும்பொடு விரவிய, மருங்கொடு வலம்புரி சலஞ்சல மணம்புணர்ந் திருங்கட லணைகரையிடம்'' என்றும், "சடசட விடுபெணை பழம்படுமிடம்....இடிகரை மணலடை யிடம்'' என்றும், "வருங்கலமும் பலபெறுதல் கருங்கடல் இருங்குலப் பிறப்பர்தமிடம்'' என்றும் புகழ்ந்தார்.

இங்கே தெங்கும் பனையும் கனிகளைத் தருவதையும், கடற்கரையோரம் இடிந்து மணல் நிறைந்து, முத்தும் பவளமும் ஆங்காங்கு காணப்படுவதையும், வலம்புரி, சலஞ்சலம் என்னப்படும் சங்குகள் ஊர்வதையும் குறித்தார். மேலும் அவ்வூரில் வெளிநாட்டிலிருந்து கருங்கடல் வழியாக வரும் பல பெரிய மரக்கலங்களைப் பாதுகாத்துத் தரும் பெருங் குடிமக்கள் வாழ்ந்தனர் என்பதையும் எடுத்துச் சொன்னார். இவ்வூரும் பெருந்துறைமுகமாக ஆரூரர் நாளில் இருந்தது போலும்.

# தாயுமானுர்*

[கச்சி. முனிசாமி உடையார், B. A.]

## I

உலகத்தில் மக்களாய்ப் பிறந்த நாம் இப்போதிருக்கின்ற நிலையைக் காட்டிலும் உயர்ந்த நிலையை அடைய இச்சை உடையவரா யிருத்தல் இயல்பு. யாரும் தற்போதிய நிலையிலேயே இருக்கவோ அல்லது அதனினும் தாழ்ந்த நிலைக்குப் போகவோ ஆசைப்பட மாட்டார்கள் என்பது திண்ணம். உயரிய நிலையை அடைய இரண்டு வழிகளுண்டு. புத்தி ஒன்று; இறைவனுடைய அருள் விசேடம் மற்றொன்று. இரண்டுக்கும் பொதுவாக ஞானம் என்ற ஒரு பெயர் இருப்பினும், புத்தியால் வரும் ஞானம்

*இது ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் சென்னை, இராயப் பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆண்டுவிழாவில் (1937) நிகழ்த்திய சொற்பொழிவு.

சாதாரண ஞானமும், இறைவன் அருள் விசேடத்தால் வரும் ஞானம் சிறப்பான ஞானமுமாம்.

மனித உடம்பு தொண்ணூற்றாறு கருவிகளால் அமைக்கப்பட்டுள்ளது. அவைகளில் ஒன்று புத்தி. அஃது அந்தக் கரணங்கள் நான்கி லொன்றாகும். மாயை சம்பந்தமான உடல் அறிவில்லாதது. உடம்பிலுள்ள புத்தியும் அறிவில்லாததே. அறிவில்லா புத்தியால் ஞானம் உண்டாகுமா என்ற ஐயம் தோன்றுவது இயற்கை. அறிவில்லாத கண்ணாடியானது தனக்கு எதிர்ப்பட்ட பொருளைத் திருப்பிக் காட்டுவதுபோல் புத்தியாகிய கண்ணாடி தன் முன் உயிரின் அறிவு எதிர்ப்பட்டபோது அவ்வறிவைத் திருப்பிக் காட்டுவது புத்தியின் தத்துவமாகும். அப்படி புத்தி திருப்பிக் காட்டுகின்ற ஞானம் எட்டு வகைப்படும். அவை பின் வருமாறு :—

1. பூர்வ ஜன்ம வாசனையால் யுக்திக்குப் பொருத்தமாக ஆராய்ந்து அறிகிற ஞானம்.

2. ஊழ்வலியால் உண்டாகும் துன்பங்களை அனுபவித்த காரணமாக உண்டாகும் ஞானம். இது ஆதி தெய்விகம் எனப்படும்.

3. உலகத்தில் மற்ற உயிர்களால் உண்டாகும் துன்பத்தை அனுபவித்த காரணமாக வரும் ஞானம். இது ஆதியாத்மிகம் எனப்படும்.

4. பஞ்ச பூதங்களால் ஏற்படும் துன்பத்தை அனுபவித்த காரணமாக உண்டாகும் ஞானம். இது ஆதி பௌதிகம் எனப்படும்.

5. கற்க வேண்டிய நூல்களைக் கற்ற அறிவால் வரும் ஞானம்.

6. குருவால் வரும் ஞானம்.

7. நல்ல கருமங்கள் செய்வதால் உண்டாகும் ஞானம்.

8. உலகத்தில் சில பெரியார்கள் உணர்ந்து அனுபவித்துத் தம்மை மறந்தோ உயிர்கள் பேரில் வைத்த கருணையினாலோ சொல்லிய வாக்கைக் கேட்டலால் வரும் ஞானம்.

இவைகளில் ஒன்று, ஏழு, எட்டு முக்கியமெனினும், எட்டாவதாகக் கூறப்பட்ட பெரியோர் வாக்கு ஞானமடைவதற்கு மிகவும் சிறப்பான சாதனமாகும். பெரியோர் சொல்வதை நேரில் கேட்பதோ, அஃதியலாதெனின் நேரில் கேட்டவர்கள் மூலமாக அறிவதோ, அஃது மியலாதெனின் பெரியோர் இயற்றிய நூல்களை உள்ளன்புடன் கற்று அறிவதோ நமக்கு இன்றியமையாத தொன்றாகும். எனவே, தாயுமானாருடைய வாக்கை நாம் நேரில் கேட்பதற்கும், அல்லது நேரில் கேட்டவர்கள் மூலமாகக் கேட்பதற்கும், நாம் புண்ணியம் செய்யவில்லை யாகையால் அவர் இயற்றிய நூல்களை ஆராய்ந்தறிந்து அவர் சொன்ன உறுதிமொழிகளைக் கடைப்பிடித்து அதன்வழி ஒழுகி நாம் ஞானம்அடைய வேண்டியது இன்றியமையாததாகலின் நாம் அவரைப்பற்றி விசாரிக்க வேண்டியதற்கு இது முதற் காரணமாகும்.

தாயுமானாரைப்பற்றி நாம் விசாரிக்க வேண்டியது அவசியம் என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நாலடியார் என்னும் சிறந்த நூல், பெரியாருடன் பேசல், நல்ல நூல் வாசித்தல், அறஞ்செய்தல் ஆகிய இம்மூன்றையும் வற்புறுத்துகின்றது. திருமூலரும்,

“அறிவார் அமரர் தலைவனை நாடி
செறிவார் பெறுவர் சிலர்தத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியாருடன் கூடல் பேரின்ப மாமே”

என்றார். பெரியாருடன் கூடல் நமது நாட்டு ஒழுக்கமாகும். சம்பந்தர் தன்னுடைய ஊருக் கருகாமையில் போகின்றார் என்று கேள்வியுற்ற சிறுத்தொண்டர் ஓடிச் சம்பந்தருடைய திருவடிகளில் வீழ்ந்து தன்னுடைய திருப்பதிக்கு அழைத்துச் சென்றார் என்பதைச் சேக்கிழார்,

“அருகணையுந் திருப்பதிக ளானவெலா
மங்கணரைப் பணிந்து போற்றிப்
பெருகியஞா னம்பெற்ற பிள்ளையார்
எழுந்தருளும் பெருமை கேட்டுத்

திருமருவு செங்காட்டங் குடிநின்று
சிறுத்தொண்ட ரோடிச் சென்றங்
குருகுமனங் களிசிறப்ப வெதிர்கொண்டு
தம்பதியுட் கொண்டு புக்கார்"

என்று கூறுகிறார்.

பொல்லாங்கு புரிந்தொழுகிய பல்லவனும் திருநாவுக்கரசரின் மகிமையையும், சைவத்தின் பெருமையையும் உணர்ந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து அவரை அடைந்த போது சுவாமிகளும் அரசனை ஏற்றுக்கொண்டார். அவன் முன் தமக்கு இயற்றிய கொடுஞ்செயல்களை நினைந்தாரில்லை. இஃது சான்றோருடைய உத்தம குணமாகும்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

என்பன தமிழ்மறை வாக்கல்லவா? எனவே, பெரியாருடன் கூடுதல் நம்நாட்டு ஒழுக்கமாகும். ஆதலால் நாமும் தாயுமானரை அவர் இயற்றிய நூல் மூலமாக அடைந்தும் அவர் சரித்திரத்தைக் கேட்டும் புத்திஞானத்தைப் பெற்றுத் துன்பத்தை ஒழித்து இன்பத்தை அடைவதற்காக நாம் அவரைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்பது இரண்டாவது காரணமாகும்.

தாயுமான சுவாமிகள் வேதாரண்யத்தில் கேடிலியப்பப் பிள்ளைக்கு இரண்டாவது மகனாகத் தோன்றிக் கல்வி அறிவு முதலியவைகளில் சிறந்து அந்நாட்டு அரசனிடம் அமைச்சுத் தொழில் பூண்டு விளங்கிவந்தார். அமைச்சராக இருக்கும் காலத்திலேயே தம் அறிவை உலகப் பொருள்களில் செலுத்தாது, அஃது அழியக்கூடியது நிலைத்த இன்பம் தரத்தக்கதன்று என்பவற்றை அறிந்து உயிரைப்பற்றியும் விசாரிக்க ஆரம்பித்துப் பல நூல்களைக் கற்றார். கற்குங்

தோறும் அவருக்குச் சந்தேகங்கள் அதிகமானதே தவிற உண்மை விளங்கவில்லை.

"அறிதோ றறியாமை கண்டற்றால் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு"

என்றபடி நூல்களை நுணுக்கமாக ஆராய்ந்து அறியுந்தோறும் முன்னிருந்த தமது அறியாமையையே கண்டார். அறியாமையைப் போக்கிக்கொள்ள மிகுந்த வேட்கையுடையவராய், பசி வந்த வண்டுபோல் ஓர் ஆசிரியனைத் தேடிச் சென்றார். ஊழ்வினைப் பயனாகத் திருமூலர் மரபில் வந்த மௌன குரு ஒருவர் தாயுமான சுவாமிகளின் வேட்கையைத் தணிவிப்பதற்காக அவரை எதிர்நோக்கி வந்து திரிசிராப்பள்ளியில் சந்தித்தபோது சுவாமிகள் அனல் முன்பட்ட நெய் போல் உருகினார். சுவாமிகளின் பக்குவ நிலையை அறிந்து மௌனகுரு உபதேசம் செய்தருளினார்,

"எட்டுதற்கரிய சற்குரு அருளால் இயம்புமோர்
மொழியினைப் பெற்றே
நிட்டை சாதித்தே சகல கேவலங்கள் நீங்கிடில்
பிறப்பிறப் பறும்"

என்றபடி மௌனகுரு உபதேசத்தின் பயனாகத் தாயுமானர் நிஷ்டையிலிருந்தார். எனினும் பழவினை வாசனையால் சிற்சில சமயங்களில் நிட்டை கலைந்து சுவாமிகள் பகிர்முகப் படுவதுண்டு. அப்படி பகிர்முகப்பட்ட காலங்களில் உலகப் பொருள்களில் ஈடுபடாமல் பல பாடல்கள் பாடினார். அவை தாம் நமக்கு இப்போது கிடைத்திருக்கிற பாடல்களாகும். சுவாமிகள் கடைசியில் இராமநாதபுரம் சென்றிருந்தபோது அவ்வூரில் பல காலங்கள் மழையின்மையால் குடிகள் வருந்தியிருப்பதை உணர்ந்து சுவாமிகள் மழைபெய்விப்பாரா என்று அவ்வூர் அரசன் விசாரித்தான். இதை அறிந்த தாயுமானர் ஒரு வெண்பா பாடி மழை பெய்வித்தார். இப்படியாக நிட்டையிலிருந்தும் கடவுளைத் துதித்தும் சுவாமிகள் இலட்சிமிபுரம் என்ற ஊரில் முடிவில் நிரதிசயானந்த சுகத்தைப் பெற்றார்.

# திருவாவடுதுறைக் குருபரம்பரை

[திருவாவடுதுறை யாதீன வாலாற்றை யறிவிக்கும் இவ்வகவல் அரசினர் கையெழுத்து நூனிலயத்திலுள்ள ஒரு சுவடியில் 'துறைசைமடத்துத் தம்பிரான்களின் பரம்பரை' யென்னும் பெயரோடு காணப்படுகிறது. பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் இயற்றிக் குரோதனஹு (1926) மகராவியில் அச்சான திருவாவடுதுறை ஆதீனக் குருபரம்பரை விளக்கம் வெளிவாராமலே இருக்கிறது.

எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை.]

நீர்க்கடல் சூழ்ந்த பார்க்கணெண் டிசையினும்
மேற்படு தென்றிசைப் பாற்படு கயிலையில்
அழகுறு புட்ப கிரியா மர்த்தந
கிரிமகா கோளா கிரிபிட் சாகிரி
யென்னுநாற் கிரியினு முன்னவ னுயிர்கட்
கன்னையு மத்தனு மாகிவீற் றிருக்கும்
நித்திய சுத்த நிராமய நிர்க்குண
சத்தி சமேத தற்பர சிற்பர
தயாபர வியாபக சச்சிதா னந்த
பராபர முதலாஞ் சதாசிவக் கடவுள்
கருணைமெய்ஞ் ஞான குருவடி வெடுத்து
மலைமக ணந்தி மால்நான் முனிவருக்
காகம மருளிப் பாகமிக் குறுதலிற்
றிருவுள மகிழ்ந்து பெருகபி டேகமுஞ்
செய்துபொன் மகுடங் குண்டலங் கண்டிகை
முத்தணி சத்திரஞ் சாமரஞ் சிவிகைகைப்
பற்று பவுத்திரம் பாதுகை வாசிகை
மற்றவும் விருதாய்ச் சுற்றிநித் தியம்பெற
ஐநான் குடனெட் டணியா கமங்களின்
ஞானபா தங்களை நவையற வுணர்ந்தருள்
அந்தமில் பெருமைசேர் [2]நந்தியெங் குரவர்க்
கருளுடை [1]நீல கண்டர்தந் தருளினர்

அன்னவர் மலவலி யகற்றியைந் தடக்கி
முன்னவ னடிநினை முனி[3]சனற் குமரர்க்
களித்தன ரனையோ ரருளோ டகலா
நித்தியப் பொருளுணர் [4]சத்திய ஞான
தெரிசனை கட்கருள் செய்தன ரவரும்
பரஞ்சோ தித்துணர் ஞானமார்த் தாண்டப்
[5]பரஞ்சோ திக்கருள் செய்தனர் பரிவுற
இத்திரு நால்வரு நித்திய முனிவராம்
இவர்களி னவையற வுயர்பரஞ் சோதிச்
சற்குரு மன்னரு மிப்புவித் தளர்வறப்
பொற்புறு பெண்ணையம் புனல்சூழ் வெண்ணையின்
மைகண்டங் கொண்ட வபன்றிரு வருளாற்
பொய்கண்டு நீங்குபு மெய்கண் டோங்கிய
மெய்கண்ட தேசிக மேலவர்க் கருளினர்
மேலவர் தமிழறி ஞாலமுற் றுய்ந்திடச்
சைவ[ா கமத்]திற் சரியைமுதன் மூன்றையும்
மூவர்பால் வைத்தபின் றெவிதே வன்மொழி
நூல்பல வுணர்ந்து மேலுற விளங்கிய
கருத்துறை நீக்குந் திருத்துறை யூருறை
திருவருள் பெருகிய குருஅரு ணந்தியெம்
பண்ணவர்க் குண்மை பகர்ந்து கண்ணெனும்
ஞானபா தந்தனை நல்கினன் கருளினர்
ஊனமி லவ்வரு ணந்தியெங் குரவர்பின்
மோனமுத் திரைதரு மூதறி வான்மிகுந்
திருமறை ஞானசம் பந்ததே சிகர்க்குத்
திருவருள் செய்திடப் பெற்றவத் தேசிகர்
மருவல ரெட்டரும் மருவலர்ப் பொழில்சூழ்
தில்லையம் பலத்திற் றிருநடம் புரிதரும்
நல்லவ ருருவமாய் மல்குமூ வாயிரர்
மறையவ ரும்புகழ் நிறையருட் டேசிகர்
உமாபதி சிவனுக் குதவின ரவைகளைத்
தமோமய மலமறச் சற்குரு வன்னவர்
மன்றவ ருருவமாம் வன்னமுற் றுணரா

நின்ற வருணமச் சிவாயநின் மலருக்
கருளின ரந்தப் பெரியமெய்த் தேசிகர்
அணிமா முதலவா மட்டமா சித்தியு
மணிவா கியபல தொன்னூல் வழியுணர்
சித்துறு சிவப்பிர காசதே சிகர்பெற
வைத்தருள் செய்தன ரித்தரை யேழ்புகழ்
அத்தகு மாவடு தண்டுறை யம்பதி
தன்னிலென் னுடைய முன்னைய மலந்தப
மெய்கண்ட சந்ததி விளங்கிமிக் கோங்கிடக்
கைகண்ட நெல்லிக் கனியினெப் பொருளையுஞ்
சிவனடி யவருணர்ந் தவனடி மருவுற
வந்தருள் [1]நமச்சி வாயதே சிகர்க்குப்
பாலித் தருளினர் பரம்பரை யிதின்மற்
றவயோ கங்கெடச் சிவயோ கம்பயில்
[2]மறைஞான தேவன் மகிழக் கொடுத்தனர்
அம்மறை ஞான சாரிய ரருள்பெறும்
மும்மலந் தெறவருண் ஞானமுழு துணர்த்திடச்
சத்திசேர் [3] அம்பல வாணசற் குரவரும்
உய்த்துணர்ந் தவ்வரு ளோங்கக் கொடுத்தனர்
பெற்றபி னற்றவம் பேணிமெய்ப் பெருநூல்
உற்றுணர் வுணர்ந்த [4] உருத்திர கோடிக்
கொற்றவர்க் கவர்முன் னுணர்த்திக் கொடுத்தனர்
அடுத்தவிவ் வுருத்திர கோடியா சிரியர்பின்
கடுத்தழை கண்டக் கடவுளெம் பெருமான்
றிடத்தவெட் டெட்டுத் திருவிளை யாடல்செய்
தென்றிரு மதுரையி லொன்று [5] வேலப்பநற்
றேசிகர் பெறும்படி யாசற வளித்தனர்
அளித்தலு மன்னவ ருளக்கரு ணையினால்
ஞாலமெல் லாம்புகழ் வாலறி வான்மிகுங்

கோலமெல் லாந்திகழ் [6] குமாரசா மிகளெனும்
ஞானதே சிகர்பெற மேன்மையி னுதவினர்
உதவலும் பத்தியின் விதமுநல் வித்தையுஞ்
சதசத் தறியுஞ் சதசத் துணர்ச்சியும்
சாபமு மருளும் மேவுநற் றன்மையு
மற்றவுந் தந்திரு நாமமுற் றதனைப்
பெற்ற [7]அப் பெரியோ ருற்றிடக் கொடுத்தனர்
ஆசிலா கமங்களு மான்றதொல் கலைகளும்
மாசற வுணர்ந்துபொன் மன்றினி னடநவில்
ஈசனார் திருவரு ளெய்தியிவ் வுயிரெலாம்
நேசமார் திருவடி நீழலி னுறவருண்
[8]மாசிலா மணிக்குரு மன்னவர்க் கருளினர்
மன்னவர் வைதிக சைவமாம் வான்பயி
ரிந்நிலத் தோங்கிமிக் கினிதாய் வளருற
நன்மொழி யுரைத்துச் சின்மயப் பொருளை
மறைத்த வம்மூல மாமலஞ் சிறியென்பா
லிராமலிங் ககலக் கரமலர் தலைதரும்
[9]இராமலிங் கப்பெய ரிறைவர்க் கருளினர்
இந்தநற் றேசிகர் வந்தமெற் ககற்றப்
பண்ணிய வினைதீர் புண்ணியம் பயிற்றித்
திருவருள் கொழித்து மருவுயிர்க் கருள்புரி
அறிவரு ளுருவமே யாகி [10] வே லப்பனுங்
குறிபெறு குரவர்க் கருளிக் கொடுத்தனர்
கொடுத்திடப் பெற்றவ ரடுத்தசொற் பொருள்களை
யெம்மதங் கட்குஞ் சம்மதம் பெறவருள்
உணர்த்தியா ருயிர்க்குச் சிவமணம் புணர்த்தும்
வல்லபம் படைத்த நல்ல [11] வே லப்பமெய்
யாசா ரியருக் கருளின ரவர்பின்
மாசான் மறைபடு மன்னுயி ரனைத்துநற்

சுத்தாத் துவிதத் தொடர்ச்சிகன் குணர்ந்து
சித்தாந் தப்பெருஞ் செல்வமுற் றோங்கிடச்
சைவசந் தானந் தழைத்தி ...றப்
பொய்யகன் றோடப் புகழ்மிக நீட
வருட்சிற் றம்பலப் பொருட்சிற் றுயிர்க்கருள்
[12] திருச்சிற் றம்பல தேசிகர்க் கருளினர்
இத்திருச் சிற்றம் பலகுரு விறையவர்
மெய்த்தவர்க் கெளிதாய் வீணருக் கரிதாய்ச்
சுத்தசிற் குணமாய்த் தொன்மறைப் பொருளாய்க்
கல்விக் கடலாய்க் கருணைமக மேருவாய்ச்
செல்வமுங் கல்வியுஞ் சிவமுந் தவமும்
நல்லறி வுண்மைமெய்ஞ் ஞானமும் பொருளும்
சொல்லவல் லபங்கொடு தோன்றியிச் சைவமாஞ்
சந்தா னத்தொரு சந்தான மாய்வளர்
சிந்தா மணியாஞ் சிவஞான பானுவென்
[13]அம்பல வாணமெய்த் தேசிகர்க் கருளினர்
நம்பினர்க் குயிர்த்துணை யாகிமுன் னின்றருள்
அம்பல வாணமெய்த் தேசிக ரவர்தாம்
உமையாள் கணவனை யமையாக் காதலி
னிமையா தெப்பொழு தும்புகழ்ந் தேத்திய
சமயா சாரியர் நால்வர்தந் தகுதியும்
திருப்பணி யருட்பணி யெனப்புரி விருப்புடை
மாணிக்க வாசகர் பேணுமுட் கரணமும்
நந்தியெங் குரவர் சந்தா னந்தனில்
வந்தமெய்க் குரவர்க டந்திரு வருளும்
புண்ணிய நன்னெறி புகழறி வன்பு
கல்வி கவிகொடை கருணையிவ் வனைத்தும்
ஓருருக் கொண்டெனச் சீரிய துறைசைவாழ்
மெய்ப்பொருட் [14]சுப்பிர மணியதே சிகர்க்குக்

கொடுத்தனர் தொடுத்த விதற்குதா கரணம்
இரட்டிய வொன்பான் கணக்குறு புராணத்
தீரைந் தாகு மிறைசிவ புராணத்
தியாருமுண் மகிழுஞ் சீருறு காந்தச்
சிவசங் கிதையிற் செப்புப தேசமாங்
காண்டத் தருளிய காதைச் சுலோகமும்
நீண்டவாக் கரியவ ருரைத்தநீ டாகமத்
தசிந்திய விசுவசா தாக்கியத் துள்ளவும்
கசிந்தநெஞ் சினர்கொளக் கவின்பெற வறைகுதும்

[இதனையடுத்து ஸம்ஸ்கிருத உபதேச காண்டத்து 86-வது அத்தியாயத்திற் காணும் 25 சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன. பின் 'இதன்மேல் அசிந்திய விசுவசாதாக்கியத்தில்' என்று மாத்திரம் எழுதப்பட்டுள்ளதேயன்றி ஆகம சுலோகங்கள் காணப்படவில்லை.]

**குறிப்புகள் :**

3. ஆமர்த்தக மடமென்றும் கோளகி மடமென்றும் வழங்குவது முண்டு. **சித்தாந்த சாராவலி** கிரியா பாதத்திறுதியிலே 'பரத கண்டத்தில் துர்வாச மாமுனியினாலே ஸ்தாபிக்கப்பட்டது ஆமர்த்தக மடம். அந்த மடத்தில் கௌசிகர் காஸ்யபர் முதலானவர் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபரான ஸ்ரீகண்ட பரமேஸ்வரரை யுபாஸித்து அவரிடத்திருந்து ஆகம ஞானம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இவர்களுடைய சிஷ்யர் ஸநத்குமாரர் முதலான நால்வரும். பின்பு ஆமர்த்தக மடத்திலிருந்து அதற்குச் சரியானதாக ரணபத்திரம் கோளகி புஷ்பகிரி என்று மூன்று மடம் பிரிந்தது. ஆமர்த்தகத் தோடுகூட நாலு மடங்களுக்கும் ஸநத்குமாரர் முதலான நால்வரும் அதிபதிகளா யிருந்தார்கள். ஆமர்த்தக மடத்திற் கதிபதி ஸநத்குமாரர், அங்கே கதம்ப வ்ருக்ஷம், அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளா யிருந்தார்கள். புஷ்பகிரி மடத்திற் கதிபதி ஸநகர், அங்கே அர்ஜுந வ்ருக்ஷம், அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளா யிருந்தார்கள். கோளகீ மடத்திற் கதிபதி ஸநாதனர், அங்கே ஜம்பூ வ்ருக்ஷம், அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளாயிருந்தார்கள்.

ரணபத்ர மடத்திற் கதிபதி ஸநந்தர், அங்கே வடவ்ருக்ஷம், அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளா யிருந்தார்கள். கோதாவரீ தீரத்தில் சைவர்கள் வாசஞ்செய்யும் மந்த்ரகாளி யென்னும் ஒரு பட்டணமுண்டு. அங்கே சிவன் வாசஞ் செய்கிறார். அவ்விடத்தில்தான் சைவாசாரியர்கள் விசேஷமா யுண்டாயிருந்தார்கள். அவ்விடத்தில் மந்த்ரகாளிஸ்வரரைச் சூழ, ஆமர்த்தக முதலான இந்நான்கு மடங்களு மிருந்தன ' என மடங்களின் வரலாறு விஸ்தரிக்கப்பட்டது.

21. ஸ்ரீகண்டர், திருநந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதி முனிவர் இவர்கள் கயிலையிலுள்ளவர்கள்.

36. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவனார் என்னும் நால்வரும் சந்தானகுரவரெனப்படுவர். இவர்கள் சிவஞானபோத முதலிய சாத்திரங்களை வெளியிட்டவர்கள்.

60. சித்தர் சிவப்பிரகாசர் வேதாரணியத்திலும் திருவாவடுதுறையிலும் நெடுங்காலம் வசித்தவர் ; அருணமச்சிவாயரிடத்து ஞானோபதேசம் பெற்றவர். திருமூவலூர் வைத்தியநாதர்க்கு அருளுபதேசஞ்செய்து நமச்சிவாய தேசிகரெனத் தீக்ஷாநாமமளித்துச் சிறிதுகாலஞ் சென்றபின் வேதாரணியம் நோக்கிச் செல்பவர் சைவ சித்தாந்த மரபு தழைக்க ஞானோபதேசஞ் செய்து வருமாறு ஆணை தந்து தம் வழியே சென்றனர்.

67. நமச்சிவாய தேசிகர் (1550) திருவாவடுதுறையாதீன முதல்வர். இவர் ஸ்ரீ சிவாக்கிர யோகிகளைச் சந்தித்ததாகக் கதை வழங்குகின்றது. சிதம்பரத்தில் பூசையாதிகள் சரிவர நடவாமைக்கு வருந்தித் தமது சீடருள் ஒருவராகிய சிவப்பிரகாசரை அரசினரிடத்தனுப்பினார். அவர் வீரசைவ வேடம் பூண்டு காரிய முடித்து நிகழ்ந்ததை ஆசிரியர்க்கு அறிவித்தனர். பின் அவர் கட்டளைப்படி சிவப்பிரகாசர் வீரசைவராகவே யிருந்து துறையூராதீனத்துக்கு முதல்வராயினர். **அத்துவித வெண்பா** வென்னும் வீரசைவ சாத்திரஞ் செய்தனர். மற்றொரு சீடரும் துவிதீய ஆசிரியருமாகிய தக்ஷிணாமூர்த்திதேசிகர் [1]**தசகாரியம்** [2]**உபதேசப்பஃறொடை**யென்னும் இரண்டு ஞான நூல்களையு மியற்றினர்.

73. நமச்சிவாய தேசிகரிடத்து உபதேசம்பெற்றவராகிய இவர் [3]தசகாரியம், [4]சன்மார்க்க சித்தி, [5]சிவாச்சிரமத்தெளிவு, [6]சித்தாந்தப் பஃறொடை, [7]சித்தாந்த சிகாமணி, [8]உபாயநிட்டை வெண்பா, [9]உபதேச வெண்பா, [10]நிட்டை விளக்கம், [11]அதிசயமாலை, [12]நமச்சிவாய மாலை என்னும் பத்து ஞான நூல்களை யியற்றினர். இவருடைய சீடருளொருவராகிய உலகுடைய நாயனார் அதியால் இவர் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாச மென்னும் மூன்று நூல்களுக்கும் சிந்தனையுரை யியற்றினரென்று புலப்படுகிறது. இவருக்குப் பணிபுரிந்து பக்குவமடைந்த பூப்பிள்ளையின் பொருட்டு உயிரட்டவணை யென்னும் சிறு வசன சாத்திர மியற்றினார்.

76. அக்காலத்து மதுரையை யாண்ட முத்துவீரப்ப நாயக்கரின் தமையனாராகிய செவந்தியப்ப நாயக்கர் திருவாவடுதுறையைச் சார்ந்த மடங்கள் கட்டுதற்காகப் பலவூர்களில் இடங்களும் மானியங்களும் கொடுத்ததற் கறிகுறியான தாமிர சாஸனங்கள் சாலிவாகன சகம் 1537 (1615), 1539 (1616) 1543 (1621) என்னும் ஆண்டுகளில் ஏற்பட்டன.

91. பிற்குமாரசுவாமி தேசிகர். இவர்காலத்துத்தான் சுவாமிநாத தம்பிரானை மயிலேறும் பெருமாள்பிள்ளை அழைத்துக்கொண்டு போய் அவர்க்குத் தமிழிலக்கண விலக்கிய நூல்களனைத்தும் கற்பித்ததோடு கனகசபாபதி சிவாசாரியாரைக் கொண்டு வடமொழி வியாகரணாதிகள் கற்பிக்கச்செய்தனர். சுவாமிநாததம்பிரான் இலக்கணக்கொத்து இயற்றி அரங்கேற்றினர். மாசிலாமணிதேசிகர் மயிலேறும் பெருமாள் பிள்ளை வேண்டுகோட்கிணங்கிச் சுவாமிநாத தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகஞ் செய்து ஈசான தேசிகர் எனச் சிறப்புப் பெயரிட்டுத் திருநெல்வேலி ஈசானமடத்திலிருக்குமாறு செய்தனர். சுவாமிநாத தேசிகர் [13]தசகாரியமொன் றியற்றினர்.

111. பின்வேலப்ப தேசிகர். இவர் சுசீந்திரத்தில் அவிதிய ஆசிரியராயிருந்த காலத்துப் [14]பஞ்சாக்கரப் பஃறொடை யென்னும் ஞான நூலியற்றினர். இப்பதினான்கு நூல்களும் பண்டார சாத்திரங்க ளெனப்படும். அக்காலத்துத்தான் சிவஞானமுனிவர் திருவாவடுதுறை மடத்தை வந்தடைந்தது. இவ்வாசிரியர் தீருப்பறிய

லூர்ப் புராணமு மியற்றினர். இவர் ஆதீனகர்த்தராயிருந்த காலத்தி லேயே சிவஞானபோத திராவிட மாபாடியம் அரங்கேற்றப்பட்டது.

119. இவர் காலத்துத்தான் திருத்தணிகையில் சைவாசாரிய குலத்திலுதித்துக் கச்சியப்பரெனப் பெயர்கொண்டவரும், காட்டுமன்னார் கோயிலிலே கார்காத்த வேளாளர் குலத்திலுதித்த சுப்பிரமணியரும் திருவாவடுதுறையை யடைந்தது. இவர்காலத்தேயே திருவாவடுதுறைச் சாஸ்திரஞ் சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் திருவாவடுதுறைத் தலபுராணம் பாடி யரங்கேற்றினதும், இலக்கணஞ் சிதம்பரநாத சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் பாடினதும்.

129. இவர்காலத்துத்தான் கச்சியப்ப முனிவர் திருவானைக்காத் தலபுராணம், பூவாளூர்த் தலபுராணம், பேரூர்த் தலபுராணம் என்னும் புராணங்களை இயற்றினர்.

142. இவர்காலத்துத்தான் திருவிடைமருதூரிற் சைவாசாரிய குலத்திற் பிறந்து திருவாவடுதுறையில் ஞானோபதேசம் பெற்ற ஆதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள் சென்னைக்குச் சென்று அனேகர்க்குப் போதகாசிரியராயிருந்தது. இத் தேசிகர்க்குப் பின் அம்பலவாண தேசிகரும் சுப்பிரமணிய தேசிகரும் பண்டாரசந்நிதிகளா யிருந்தனர். அம்பலவாண தேசிகர் (1846-1869) காலத்துத்தான் யாழ்ப்பாணத்து ஆறுமுகம்பிள்ளை அரிய பிரசங்கஞ்செய்து நாவலரென்னும் பட்டம் அடைந்தது. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை உபதேசம் பெற்றதும் அக்காலத்துத்தான். சுப்பிரமணிய தேசிகர் (1869-1888) திருக்குற்றலத் தலபுராண மியற்றிய திரிகூடராசப்ப கவிராயர் மரபினர்; சிவஞானசித்தியார்க்குப் பதவுரை யியற்றியவர். திருவாவடுதுறையிற் போதகாசிரியராயிருந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு மஹாவித்வான் என்னும்பட்டமும், யாழ்ப்பாணத்துச் சபாபதிபிள்ளைக்கு நாவலர் என்னும் பட்டமும் அவர்காலத்துத்தான் அளிக்கப்பட்டன. பூஜை சுப்பிரமணியத்தம்பிரான் வரலாறு இதனோடு முடிவடைகிறது.

# திருவாசகம்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

**பண்டாய நான்மறை**

*காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்*
*பேணு மடியார் பிறப்பகலக்—காணும்*
*பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்*
*பிரியானை வாயாரப் பேசு.*

பதவுரை :—நெஞ்சே - நெஞ்சே,

காணும் கரணங்கள் எல்லாம் - உலக வாழ்வில் சுட்டி அறிதற்கும் அச்சுட்டறிவின்வழி செயல் நிகழ்தற்கும் அவ்வறிவு செயல்களினால் உலகச் சிற்றின்பம் நுகர்தற்கும் ஏதுக்களாயுள்ள உள் அந்தக்கரணங்கள், அந்தக்கரணங்கள், ஐம்பொறிகள், தொழிற் கருவிகள், ஐம்பொறிகளும் தொழிற் கருவிகளும் முறையே அறிதலும் செய்தலுமாகிய தத்தம் தொழிற்பாட்டிற்கண் மதுகையை விளைத்து நிற்கும் சூக்கும தன் மாத்திரைகள், தூல தன் மாத்திரைகள் ஆகிய எல்லாக் கருவிகளையும்,

பேரின்பம் என - அக்கருவிகளை யெல்லாம் தூவெளி அருளொளியால் நிரப்பி மல இருளை நீக்கிச் சிவகரணங்களாக்கிப் பேரின்பம் நுகர்தற்கு ஏதுக்களாயுள்ள கருவிகள் என,

பேணும் அடியார் - தங்கள் மனதில் விரும்புகின்ற அடியார்களுடைய,

பிறப்பு அகல - பிறவித் துன்பம் நீங்க (அதாவது) நித்தியமான பேரின்ப வாழ்வை அடையும்படி,

காணும் பெரியானை - அவர்களோடு உடனாய் விரவி நின்று விடயமாகிய தன்னை அறிவித்தலன்றி அவ்வாறு அறிவித்த தன்னிடத்தி லவர்களைச் செலுத்தித் தன்னோடு உடனாய் நின்று தன்னை விடயிக்குமாறு செய்தும் வருகிற பெருந்தகைமை யுடையவனும்,

என்றும் பெருந் துறையிற் பிரியானை - எப்பொழுதும் திருப்பெருந்துறைக் கோயிலை விட்டுப் பிரியாதிருக்கிறவனு மாகிய சிவபெருமானை,

வாய் ஆரப் பேசு - அவனுடைய அருட்செயலை (மனதார நினைந்தும்) வாயாரப் புகழ்ந்து பேசியும் (மெய்யார வணங்கியும்) வழிபடுவாயாக. நீ அவ்வாறு வழிபடுவாயா கில் உன்னைச் சிவபெருமான் பேரின்ப மடையச் செய்வன் என்பது குறிப்பெச்சம்.

விளக்க உரை :—பஞ்ச கஞ்சுக உடலோடும் பஞ்சக் கிலேசங்களோடும் கூடிப் போகம் நுகருதற்குத் தகுதியடைந் திருக்கிற புருடனாகிய உயிர், சிவசத்தியின வியக்கப்பெற்று முதற்கண் அந்தக் கரணங்களி னியைபின்றி, அராகத்தால் வேட்கையுடையதாய் வித்தையில் ஐம்பொறிகளிலொன்றா கிய கண்ணை அதிட்டித்து நின்று புறத்திலுள்ள ஐம்புலப் பொருள்களில் உருவப்பொருளொன்றைப் பொதுவகையாற் பெயர், குணம், தொழில், கன்மம், பொருள், ஆகிய வேறு பாடுகளின்றி நிருவிகற்பமா யறிகின்றது. பின் அவ்வுயிர் தொழிற் கருவிகளி லொன்றாகிய வாக்கை அதிட்டிப்ப, வாக்கு வசனிக்கும். இது நிருவிகற்பக் காட்சியென்று கூறப் படும். இக்காட்சி நிகழ்தற்குத் தூலபூதங்களும் சூக்கும பூதங் களும் இருவகை இந்திரியங்களின் தொழிற்பாட்டிற்கு இடமாயிருந்து, மதுகையை விளைத்து நிற்கும். (ஒரு காலத் தில் ஐம்பொறிகளிலொன்றுவது கன்மேந்திரியங்களி லொன் றுவது தொழிற்பட்டு விடயங்களி லொன்றைத்தான் உயிர்

விடயிக்கும். ஆதலின் இங்கே கண், வாக்கு, உருவம் ஆகிய ஒவ்வொன்று உதாரணமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.) பின் உயிர் மனத்தை அதிட்டித்து நிற்ப, மனமானது சித்தமாய் நின்று இஃது யாதாகற்பாற்றெனச் சிந்தித்துப் பின் இது குற்றியாகற்பாற்று மகனாகற்பாற்று எனச் சங்கற்பித்தும், அது ஆமோ அன்றோ என ஐயுற்றும், நிச்சயித்தற்கேதுவாகிய வேட்கையை விளைக்கும். அதன்பின் உயிர், ஆங்காரத்தை அதிட்டிப்ப, ஆங்காரமானது குற்றி என்றுவது மகன் என்றுவது இதனையான் நிச்சயிப்பேன் என்னும் அகந்தையை விளைத்து நிச்சயித்தற்கண் முயலும் ஊக்கத்தை உண்டாக்கி, அதற்கு ஏதுவாகப் பிராணவாயுவை இயக்கி நிற்கும். அதன்பின் உயிர், புத்தியை அதிட்டிப்ப, புத்தியானது பார்க்கப்பட்ட பொருள் மகன் அல்லது குற்றி என்று பெயர், சாதி, குணம், கன்மம், பொருள் என்னும் வேறுபாடுகள் பற்றிச் சிறப்பு வகையாலறியும். இவ்வாறு உயிர் சிறப்பு வகையாலறிந்த பின்னும் தொழிற்கருவிகளின் தொழிற்பாடும் நிகழலாம். இது சவிகற்பக்காட்சி என்று கூறப்படும். பின்னர் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் உள்ளந்தக்கரணங்கள் சாத்துவிக குணவிளக்கத்தால் இன்பமும், இராசதகுண விளக்கத்தால் துன்பமும், தாமதகுண விளக்கத்தால் மோகமும் புத்தியில் கண்ணாடி போலப் பிரதி விம்பமான போகப்பொருளுக்கு உண்டாக்கி அவற்றை உயிரினிடத்துவிடயமாகும்படிச்செய்யும். இதுதன் வேதனைக் காட்சி என்று கூறப்படும். இங்ஙனம் பத உரையிற் கூறப்பட்ட முப்பத்தொரு தத்துவக்கருவிகளால் உலக வாழ்வில் இன்பம், துன்பம், மோகங்கள் உண்டாகி மக்களுக்கு உலக போகம் நிகழுமென அறிக. சுத்தமாயைக்குச் சேர்ந்த ஐந்து தத்துவக் கருவிகள் சிவசக்தி முப்பத்தொரு

தத்துவக் கருவிகளையும் இயக்குதற்குப் பிரேரகக் கருவிக ளாக மாத்திரம் அமைதலால் அவை கூறப்படவில்லை.

பேரின்பம் என-பேரின்பம் என்பது இங்கேபேரின்பக் கருவிகளைக் குறிக்கிறது. அதாவது மேலே கூறியவாறு சிற்றின்பம் நுகர்தற்கு ஏதுக்களாகிய கருவிகளெல்லாம் பேரின்பம் நுகர்தற்கு ஏதுவாகிய கருவிகளாகப் பயன் படுத்தப்படுகின்றன. சிற்றின்பத்திற்கு ஏதுக்களாயுள்ளன, காரிய நிலையிலுள்ள தத்துவக்கருவிகள். இவை நிலையில் லாது மாறிமாறி வருதலால் பொய், (அசத்து) என்று கூறப் படும். அக்கருவிகளெல்லாம் காரண நிலையில் எப்பொழுதும் உள்ளதாய் தூவெளியில் ஒடுங்குவனவாகும். இது மெய்ச் (சத்து) என்று கூறப்படும். அடியார் ஒருவர், தமது, சிவோகம்பாவனை முதலிய தவங்களால் மல இருள் நீங்கப் பெற்றுச் சிவத்தோடத்துவிதமாய் ஒன்றி நிற்கும்பொழுது தத்துவக்கருவிகள் முழுவதும் தூவெளி ஒளியால் நிரம்பப் பெற்று அவற்றிலடங்கி யிருத்தலால் மல இருள் நீங்கித் தூய்மை அடைகின்றன. அவ்வெளி சிவனுடைய அகண்ட ஒளியாதலால் அவ்வடியாருடைய சிந்தை மல கன்ம மாயை களினுடைய தொடக்கினின்று நீங்கிச் சிவகாரணமாய்ச் சிவமே யாகும் என்று கூறப்படுகின்றது. "சிந்தைய தென்னச்சிவ மென வேறில்லை" (2853) என்றும், "சித்தம் சிவமாய் மல மூன்றும் செற்றவர்" (2969) என்றும் திருமூலரும், "சிந்தையுட் சிவனாய் நின்ற உருவினைக் கண்டு கொண்ட தென்னுள்ளமே" (5-98-8) என்று திருநாவுக்கரசு அடி களும், "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் (320) என்று மாணிக்கவாசக அடிகளும் சிந்தையைச் சிவ மென்று கூறியிருத்தல் காண்க. இத்தகைய அடியார் சிவ மொன்றையே எங்கும் காணுதலால் ஐம்பொறிகளின் வழி யாய் ஐம்புலவிடயங்களிற் செல்லாது தத்துவக்கருவிகளையும்

சிவமெனவே கண்டு அவற்றைப் பேரின்ப நுகர்தற்கருவி களாகக் கொள்ளுவர் என்பது கருத்து.

உய்யவந்த தேவ நாயனார் தாம் அருளிச் செய்த திருவுந்தியார் 33-வது பாட்டில் "பெற்ற சிற்றின்பமே பேரின்பமா மங்கே - முற்றவரும்பரி சுந்தீபற முளையாது மாயையென் றுந்தீபற" என்று இருக்கருத்தைக் கூறி யருளினார்..

பேணும் அடியார் - பேணுதல் = விரும்புதல். பேரின் பத்தை அடைய மிக்க வேட்கையுடைய அடியார். பேணும் அடியார் என்றதனாலே அவர் துரியநிலைக்குரிய யோகம் பயின்று மும்மல சக்திகளை வாட்டிச் சிந்தைதெளிந்து யோகக்காட்சி உடையவராய்த் துரியாதீதத்திற்குரிய மெய்ஞ் ஞானநிலை அடைதற்குத் தவமுயற்சி செய்துகொண்டிருக்கும் அடியார் என்பது பெறப்பட்டது.

பிறப்பு அகல - பிறப்பு = பிறவித்துன்பம், பிறவித் துன்பம் நீங்குதல் என்பது பேரின்பமடைதலாகும்.

காணும் பெரியானை - காணுதல் = அறிதல். காணும் என்ற பெயரெச்சம் பெரியான் என்ற பெயர் கொண்டு முடிந் தது. அறிவிக்க அறியும் இயல்புடைய அடியார், பேரின்பப் பொருளாகிய சிவம் தன்னை அறியும்படி அவர்களோடு விரவி நின்று அறிவித்தல் அல்லாமல் அவர்களோ டொருங்கியைந்து நின்று அவர்களைப் போகப் பொருளாகிய தன்னிடத்திற்குச் செலுத்தித் தன்னை விடயிக்குமாறு செய்தலாகிய காணு முதவி. இங்கே காணுதல் என்பத னாற் கூறப்பட்டது. இனம்பற்றி இங்கே கூறப்படாத காட்டு முதவியும் பதவுரையிற் கூறப்பட்டது. "காணும் கண்ணுக்குக் காட்டுமுளம் போல்—காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின், அயரா அன்பி னரன்கழல் செலுமே" என்ற சிவஞான போதம் (11ம்) சூத்திரக் கருத்து

இங்கே கூறப்பட்டது. இங்கே கண்டு காட்டலின் என்பது காட்டிக் காண்டலின் என்று பொருள் கொள்ளப்படலால் இந்தக் காண்டல் கூறப்பட்டது. வேண்டுவார் வேண்டுவதே ஈவான் சிவபெருமான் ஆதலின், காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணு மடியாருக்குப் பிறப்பகலச் செய்வான் என்பார் காணும் பெரியானை என்றார். காணுங் கரணங்களெல்லாம் பேரின்ப மெனப் பேணும் அடியார் தங்கள் வேட்கை பற்றி இறைவன் தங்களுக்கு இடைவிடாது செய்து வருகின்ற காட்டும் உதவியையும் காணுமுதவியையும் தங்கள் தூய சிந்தையில் நினைக்குந்தோறும் இறைவனிடத்துச் செல்லும் வேட்கையே அடங்காது மீதூர்ந்து பேரின்பமாக அவர்களுக்கு விளங்கித் தோன்றும். பேணுமடியார் என்றதனால் அடியாரிடம் வேட்கை நிகழ்தலும், அவ்வேட்கையின் வழி அவ்வடியாரிடம் அறிவும் செயலும் நிகழ்தற்குச் சிவபெருமான் அவர்களுக்கு அறிவித்தலும், அறிதலாகிய செய்வித்தலும், நிகழ்த்துதல் ஆகிய மூன்று அத்துவித நிலைகளும் கூறப்பட்டவாறாயிற்று.

வாய் ஆரப்பேசு - ஆர்தல் = நிறைதல். வாய்ஆரப்பேசுதலாவது மனதில் உண்மையான அன்பினால் நினைந்து அந்நினைவை வாயினாலே பேசுதல். பேசுதலுக்குக் காரணம் மனநினைவு ஆதலாலும், பேசுதலின் காரியம் மெய்ச்செயலாதலாலும் மனத்தால நினைதலும் மெய்யால் வணங்குதலும் உடன் கூறப்பட்டன. பேணு மடியார் பிறப்பகலக் காணும் பெரியான் என்று சிவபெருமானுடைய அருட் செயல் கூறப்படுதலின் நீயும் பயன் கருதாது அத்தகைய சிவபெருமானைத் தூய மனதால் நினைந்தும், வாயினால் அவன் அருட்செயலைப் பேசியும், மெய்யினால் வணங்கியும்

வழிபடுவாயாகில் அவ்வடியாருக்குச் செய்யும் உதவிகளை உனக்கும் செய்து உன்னைப் பேரின்ப மடையச் செய்வன் என்று குறிப்பாக நெஞ்சைப் பார்த்துக் கூறப்பட்டவா ருயிற்று.

# மாடக் கோயில்

[கோவைகிழார்]

சோழ மன்னர்களுள் பண்டைக் காலத்தில் ஆண்ட சிவனடியாரான கோச்செங்கட் சோழ நாயனுர் கட்டிய கோயில்களுக்கு 'மாடக்கோயில்' என்ற பெயர் வழங்கிவந்தது. யானைகள் உட்புகாதபடி உயர்ந்த மாடம் கட்டி அதற்குக் குறுகிய வழியுள்ளதாகச் செய்து அதன் மீது கோயில் கட்டியதால் அவ்விதக் கோயிலுக்கு 'மாடக்கோயில்' எனப் பெயர் வந்தது என்பர். அவ்வாறு கோயில் கட்டியதற்குக் காரணம் கோச்செங்கட் சோழ நாயனுர் சரிதையால் தெரிய வரும்.

சோழநாட்டில் காவிரிக் கரையில் சந்திர தீர்த்தத் தருகில் ஓர் அழகிய வனத்தில் ஒரு வெண்ணுவல் மரத் தடியில் ஒரு சிவலிங்கம் வெளிப்பட்டது. அதனை ஒரு வெள்ளானை வழிபட்டுவந்தது. அதனுல் அத்திருப்பதிக்குத் திருவானைக்கா எனப்பெயர் வந்தது. அங்கே ஞானஉணர்ச்சி பெற்ற ஒரு சிலந்தி அவ்விலிங்கத்தையே வழிபட்டு வந்தது. யானை நீரால் அபிஷேகம் செய்யும். சிலந்தி மூர்த்தியின் மேல் இலை விழாமல் கூடுகட்டும். யானை சிலந்தியின் செயலை அனுசிதம் என்று கூட்டை அழிக்கும். சிலந்திக்கு அது கண்டு சினம்வரும். உருத்து எழுந்து சிலந்தி யானையின்

துதிக்கைக்குள் புக, யானை துதிக்கையை மோதி அடித்து இறந்தது. சிலந்தியும் இறந்தது. யானை முத்தி அடையச் சிலந்தி சோழர் குலத்தில் பிறந்தது.

சோழ அரசி கருவாய்க்கையில் காலம் தாழ்த்துப் பிறக்கச்செய்தமையால் சிவந்த கண்ணுடன் குழந்தை பிறந்தது. குழந்தைக்குச் செங்கணன் எனப் பெயர் வந்தது. அவ்விளவரசர் முடிசூடப்பெற்றுத் திருக்கோயில்கள் கட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். முதலில் தான் திருவருள் பெற்ற திருவானைக்காவில் திருக்கோயில் அமைத்தார். அமைச்சர்களைக் கொண்டு சோழநாட்டில் மற்ற இடங்களிலும் பலதிருக்கோயில்களைக் கட்டுவித்தார். அக்கோயில்களில் கட்டளைகளும் அமைக்கப்பெற்றன. பிறகு தில்லையில் அந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டியும் பல திருத்தொண்டுகளைச் செய்தும் கடைசியில் சிவனடி சேர்ந்தார்.

இச்சரிதையைப் பெரிய புராணவாயிலாக அறிகிறோம். இச்சரிதையில் 'மாடக்கோயில்' என்ற பெயரும் அந்தப் பெயரின் காரணமும் கூறப்படவில்லை. ஆனால் அவர் கட்டினகோயில்களின் பெயர்களில் 'மாடக்கோயில்' அல்லது 'பெருங்கோயில்' என்ற அடைமொழி இருக்கக்காண்கிறோம். அக்கோயில்களின் அமைப்பும் ஏனைய கோயில்களைப்போல் இராமல் யானை புகாதபடி அமைக்கப் பெற்றிருத்தலும் காண்கிறோம். தாம் முற்பிறப்பில் சிலந்தியாய் இருந்தபோது தம் உயிருக்குப் பகையாக வந்த யானை இனிமேலும் தம் செயலை அழிக்காமலும் ஈசனுக்கு இயற்றும் திருப்பணியைக் கெடுக்காமலும் இருக்கும் பொருட்டுத் தாம் கட்டும் கோயில்களை யானை புகாதபடி கட்டினார் என்று சொல்லப்படுகின்றது.

யானை புகாதபடி கட்டிய விதங்கள் இரண்டு என்பர். மூர்த்திக்கு எதிரே தோன்றும் வாயிலைப் பலகணிபோல்

அடைத்து, ஒரு பக்கத்தில் சிறுவழி ஒன்றுவிட்டு, அதன் வழியாக அன்பர்கள் உட்செல்ல அமைத்திருப்பது ஒரு முறை; இதனைத் திருவானைக்காவில் காணலாம். இக்கோயிலே கோச்செங்கணார் கட்டிய முதற்கோயில் ஆகும். மூர்த்திக்கு எதிரே கதவு பலகணியால் அடைக்கப் பெற்றதால் யானை உள்ளே புகுவதற்குச் சாத்தியமில்லை யல்லவா? இனி இரண்டாவது விதம் தான் உயர்ந்த மாடத்தைக் கட்டி எழுப்பி அதன் பேரில் ஆலயம் நிர்மித்தது. அதற்கு வழி குறுகலாக இருக்கும். யானை அதன் வழியாக ஏற முடியாது. அவ்விதக் கோயில்கள் அம்பர் பெருங்கோயில், வைகல் மாடக் கோயில் முதலியன. இவ்விருவிதக் கோயில்களும் சோழ நாட்டில் உள்ளன. இவைகளுக்கெல்லாம் பொதுவாக மாடக் கோயில்கள் எனப் பெயர் வழங்கிவரும்.

மாடக் கோயில்களைப் பற்றியும் அவைகளைச் செங்கணார் கட்டினார் என்பதைப் பற்றியும் தேவாரங்களில் சைவாசாரியர்கள் பாடியிருப்பதும் தவிர வைணவ நூல்களிலும் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. திவ்வியப் பிரபந்தத்தில் பெரிய திருமொழி 6-பத்து 6-ம் திருமொழியில் திருநறையூர்ப் பதிகத்தில்,

"செம்பியன் செங்கணான் சேர்ந்த கோயில்"

என்று திருமங்கை மன்னர் கூறியுள்ளார். அதைப் பின்னர் விவரிப்போம்.

இனிக் கோச் செங்கட்சோழர் 78 ஆலயங்களைக் கட்டினார் என்று பெரிய புராணம் கூறுகின்றது.

ஆனால் இப்போது அவைகள் எவை என்று எடுத்துரைக்க முடியவில்லை. இதுவரை நூல்களில் தேடிப் பார்த்ததில் அடியிற்கண்ட ஆலயங்கள் தான் கிடைத்தன. இனியும் கிடைக்கின் பின்னர் வெளியிடப்படும்.

அம்பர் பெருந்திருக்கோயில். (பூந்தோட்டம் R. S. கிழக்கு 2 கல்)

" அரிசில் அம்பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே "

(3 திருமுறை சம்பந்தர் - 1)

ஆக்கூர்த் தான் தோன்றி மாடக் கோயில் (R. S. தரங்கம்பாடி வழி)

" ஆக்கூரில் தான் தோன்றி மாடத்
தமர்ந்தானை ..............." (2 திருமுறை - சம்பந்தர் - 11)

திருவானைக்கா (ஸ்ரீரங்கம் R. S. அருகு)

" சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர்செய்து
உலந்தவணிறந்த போதே கோச்செங்கணானு மாகக்
கலந்த நீர்க்காவிரிசூழ்......" (குறுக்கை வீரட்டம்)

திருச்சாய்க்காடு - (சீகாழி - தென் கிழக்கு - 9கல்)

நன்னிலத்துப் பெருங்கோயில் (நன்னிலம் R. S. மேற்கு 3 கல்)

" கோடுயர் வெங்களிற்றுத்திகழ் கோச்செங்கணான் செய்கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே "

(சுந்தரர் - 7 - திருமுறை - 11)

வைகல் மாடக்கோயில் (ஆடுதுறை R. S. 3 கல்)

" வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச்
செய்யகண் வளவன் முன் செய்த கோயிலே "

—(சம்பந்தர் 3 திருமுறை)

பழையாறை வடதளி (பட்டீச்சரம்—1 கல்)

திருவழுந்தூர் (குற்றாலம் R. S. தென் கிழக்கு 3 கல்.

"........அழுந்தை மறையோர்
வழிபாடு செய் மாமடம் மன்னினையே"—(சம்பந்தர் 2...)

திருத்தலைச்சங்காடு (தரங்கம்பாடி—வழி.......)

"................தலைச்சங்கை
மாடம்சூழ் கோயில்..........."

திருக்கீழ்வேளூர் (R. S.—1 கல்)

"................கீழ்வேளூர்
மறையவர் தொழும் பெருந்திருக் கோயில்"
—(2 திரு - சம்பந்தர்)

திருக்குடவாயில் (கொரடாச்சேரி 8 கல்)

"................குடவாயில் தனில்
நெடுமா பெருங்கோயில்..........."—(2 திரு—சம்பந்தர்"

திருநாலூர்மயானம் (குடவாயிலிலிருந்து 3 கல்)

தண்டலை நீணெறி (திருத்தருப்பூண்டி—வடக்கு 2 கல்)

"செருவருந்திய செம்பியன் கோச்செங்கண்
இருபர் தண்டலை நீணெறி காண்மினே"

திருவலிவலம் (நாட்டியத்தான் குடி 21 கல்)

குறிப்பு :—மாடக்கோயில் பெருங்கோயில் என்ற இரு மொழிகளும் ஒரே பொருளில் வந்துள்ளன. இவையே தென்னாட்டில் மிகப் பழைய கோயில்களாக இருக்கவேண்டும். கற்றளி வருவதற்கு முன்னரே ஏற்பட்டவை போலும்.

திருநறையூர்—(கும்பகோணத்திற்குத் தென்கிழக்கு 6 கல்).

இவ்வூரில் ஒரு வைணவத்தளியும் ஒரு சிவத்தளியும் உண்டு. வைணவத்தளிக்கு மணிமாடக் கோயில் என்றும், சிவத்தளிக்குச் சித்தீச்சரம் என்றும் பெயர்கள் வழங்கி வருகின்றன. வைணவ ஆலயத்தைத் திருமங்கை மன்னர் மங்களாசாசனம் பண்ணியுள்ளார். அத்திருப் பதிகத்தில்,

"செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடச் சேர்மின்களே"—1

" செழும் பொன்னிவளங் கொடுக்கும் சோழன்
சேர்ந்த திருநறையூர் "—2

" செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில் "—4

" இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்
கெழில் மாடம் எழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே "—8

எனக் காண்கிறோம். இம்மேற்கோள்களால் ஆழ்வார்களும் கோச்செங்கணான் எண்டோள் ஈசற்கு (சிவபிரானுக்கு) மாடக்கோயில்கள் எழுபது கட்டியதை எடுத்தாண்டிருக்கிறார்கள் என அறியலாம். மேலும் திருநறையூர் வைணவக் கோயிலும் அக் கோச் செங்கணாராலேயே கட்டப்பெற்றது என அறிகிறோம். இவ்வாலயத்திற்குத் தற்கால வழக்கப் பெயர் நாச்சியார் கோயில் என்பது. இதைப்பற்றிக் கூறும் சிவஸ்தல மஞ்சரி ஆசிரியர் " திருநறையூருக்குத் தெற்கு ½ மைல் தூரத்தில் நாச்சியார் கோயில் என்னும் விஷ்ணுத் தலம் இருக்கிறது. அஃது ஆதியில் சிவஸ்தலமாக இருந்தது. இப்போதும் சிவஸ்தலம் போலவே இருக்கிறது" என்கிறார். இக் கூற்றிற்கு ஆதாரம் மேலே காட்டிய மேற்கோள்களிலிருந்தே ஆராயலாம்.

மேலும் வைணவக் கோயில்களிலும் மாடக்கோயில்களாக அமைந்துள்ள வேறு சிலவற்றையும் குறிப்போம்.

கஞ்சிவரதராசர் கோயில் :—இக்கோயில் உயர்ந்தமாடத்தின் மீதுதான் கட்டப்பட்டுள்ளது. இதனை மலையாகப் பாவித்து அத்திகிரி என்பர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் :—இதுவும் மாடத்தின் மீது தான் கட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டும் யாரால் எப்போது கட்டப்பட்டன என்பது ஆராயத்தகுந்ததாகும்.

# தேவார உரை

[திரு - மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

### திருநள்ளாறுந் - திரு ஆலவாயும் - வினாவுரை

பாடகமெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றி நின்று
நாடகமாடு நள்ளாறுடையநம்பெருமானிது வென்கொல் சொல்லாய்
சூடகமுன்கைமடந்தைமார்கள் துணைவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
ஆடகமாட நெருங்குகூட லால வாயின்க ணமர்ந்தவாறே.

பதவுரை:—பாடக மெல்லடி பாவையோடும் - பாடகம் அணிந்திருக்கிற மென்மையான திருவடிகளை உடைய உமா தேவியாரோடும் கூடி,

படுபிணக்காடு இடம்பற்றிநின்று - பெரிய சுடுகாடாகிய மாயை இடத்தைப் பொருந்தி நின்று,

நாடகம் ஆடும் நள்ளாறுடைய நம்பெருமான் - பெரிய சங்கார நடனம் செய்கின்றவனும் திருநள்ளாற்றில் வீற்றிருக்கின்றவனுமாகிய எங்கள் தலைவனே,

முன்கை சூடகம் மடந்தை மார்கள் - தங்கள் முன்கைகளிலே சூடகம் அணிந்திருக்கிற பெண்கள்,

துணைவரொடும் ஏத்தி வாழ்த்தித் தொழ - தங்கள் கணவர்களோடும் மனதாலே நினைந்தும் நாவாலே புகழ்ந்து பாடியும் மெய்யாலே எட்டுறுப்பு ஐஞ்சுறுப்பு வணக்கங்கள் செய்தும் வழிபடும் படியாய்,

ஆடு அகம் மாடம் நெருங்கு கூடல் - பெண்கள் நடனஞ் செய்யும் அரங்குகளை உடைய மாளிகைகள் நெருங்கியிருக்கிற நான் மாடக்கூடலாகிய மதுரை நகரிலிருக்கிற, ஆலவாயின் கண் அமர்ந்த ஆறு இது - திருவாலவாய் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற தன்மையாகிய இது, என்கொல் சொல்லாய் - என்ன கருத்தினாலென்பதைப் பற்றி, நீ எனக்குச் சொல்லி அருள்வாயாக.

விளக்க உரை :—பாடகம் மெல்லடி பாவையொடும் - பாடகம்=பெண்கள் அணியும் ஒரு காலணி. மெல்லடி= அனிச்சப்பூ படினும் வருந்தும்படியான மெல்லிய திரு வடிகள்.

பாவை=பாவைபோன்ற அழகுடைய உமாதேவியார் - உவமையாகு பெயர். உலகை மெல்லாம் ஒடுங்கும் காலத்தில் அருட்சத்தியும் தன்னிடம் ஒடுங்கி அவ்வருட்சத்தியோடும் சிவபெருமான் சங்கார நடனம் செய்தலின் "பாவையொடும் நாடகமாடும்" என்றார். காத்தலாகிய தொழிலுக்கு அவன், உமாதேவியார் காண நடனம் செய்கின்றான்.

படுபிணைக்காடு இடம் - பிணக்காடு இடம்=பிணக்காடு ஆகிய இடம்.

உலகிலுள்ள உயிர்களின் உடல்களெல்லாம் சங்காரம் செய்யப்படுதலின் அவற்றினுடைய மாயா உடல்கள் இங்கே பிணம் எனப்பட்டது. அவற்றை இறைவன் சங்காரம் செய்து ஒடுக்குமிடம் நித்தியமாயுள்ள மாயை ஆதலின் பிணக்காடு இடம் என்றார். இந்த சங்காரம் மகாருத்தி ரனாகிய இறைவனாலே சாந்தியாதீதக் கலைவரையிலுள்ள உலகங்களை எல்லாம் அழிக்கும் சங்காரமாதலின் படுபிணக் காடு என்றார். படு என்பது இங்கே பெரிய என்னும் பொருளில் வந்தது.

நாடகம் ஆடும் நள்ளாறுடைய நம்பெருமான் - இது, நாடகம் ஆடும் பெருமான், நள்ளாறுடைய பெருமான் என விரியும். நாடகம் என்பது சங்கார நடனம்.

பெருமான்=தலைவன். இறைவன் உயிர்களுக்கெல்லாம் தலைவனாதலின் உயிர்களையும் தம்மோடு சேர்த்து நம்பெரு மான் என்றார். இறைவன் உலகிற்குத் தலைவனாகி சங்கார நடனம் செய்தலின் நாடகம் ஆடும் நம்பெருமான் என்றார்.

முன்கை சூடகம் மடந்தைமார்கள் - சூடகம் என்பது பெண்களினுடைய முன்கைகளில் அணியப்படும் ஓர் அணி. மடந்தைமார்கள்-விகுதிமேல் விகுதி.

துணைவரோடும் ஏத்தி வாழ்த்தித் தொழ - ஏத்தல்= மனதால் நினைதலையும், வாழ்த்தல்=நாவால் புகழ்ந்துபாடு தலையும், தொழுதல்=மெய்யால் வணங்குதலையும் குறித் தலினாலே மனம், நா, மெய்களாற் செய்யப்படும் மூவகை வழிபாடுகளும் கூறப்பட்டன. மூவகை வழிபாடுகளும், மக் களுடைய அறிவு, வேட்கை, செயல்கள் இறைவனைப்பற்றி நிகழ்ந்து திருந்துதற்கு இன்றி அமையாது வேண்டப்படு வனவாகும். தொழுது ஏத்தி வாழ்த்த என்பதை, ஏத்தி வாழ்த்தித் தொழ எனமாற்றிப் பொருளுரைக்க. வாழ்த்த என்ற வினையெச்சம் அமர்ந்த என்னும் பெயரெச்சத்தி லுள்ள அமர்தலைத் தழுவுகிறது.

ஆடுஅகம் மாடம் நெருங்கு கூடல்-அகம்=உள்ளிடம். அதாவது பெண்கள் நடனம் செய்கின்ற அரங்கு. மாடம்= உப்பரிகை உள்ளமாளிகை. கூடல் என்பது நான்மாடக்கூடல். அது மதுரை நகரைக் குறிக்கிறது. நான் மாடக்கூடலானது மதுரையில் நடந்த அறுபத்து நான்கு திருவிளையாடல் களில் ஒன்று.

ஆலவாயின்கண் அமர்ந்த ஆறு இது - ஆலவாய் என் பது மதுரையிலுள்ள சொக்கப் பிரான் வீற்றிருக்கின்ற கோயிலைக்குறிக்கின்றது. இன்=சாரியை, ஆறு=தன்மை. பாட்டில் நம்பெருமான் என்பதற்குப் பின் வருகிற 'இது' என்னும் சுட்டுப் பெயர் ஆறு என்பதைக் குறித்தலால் அதனை அமர்ந்த ஆறு என்பதற்குப் பின் வைத்துப்பொருள் உரைக்கப்பட்டது. அமர்ந்த ஆறு இது அமர்ந்த ஆறு ஆகிய இது.

என்கொல் சொல்லாய் - கொல்=அசைநிலை. என் எவன் என்பதன் மரூஉ. சொல்லாய் என்பதிலுள்ள ஆய்முன்னிலை ஒருமை வினை முற்றுவிகுதி. என் என்ற வினா வுக்கு விடை பாட்டிலே அடங்கியுள்ளது. உண்மை அறியாது மேலீடாகப் பார்க்கிறவர்களுக்குச் சுடுகாட் டில் நடனம் செய்யும் இறைவன் மாந்தர் நெருங்கி வாழ்கின்ற மாளிகைகளை உடைய மதுரை நகரில் வீற்றிருப்பது பொருத்தமில்லாத செயலாகத் தோன்றும்.

அவர்களுக்கு இந்தப் பாட்டு நகைச் சுவையாயிருக்கும். சைவ சித்தாந்த உண்மை அறிந்தவர்கள் இறைவன் தான் புரியும் நடனத்தினாலே ஐந்தொழில் செய்கின்றான் என்பதும், சுடுகாடாகிய நித்தியமாயுள்ள மாயை, உலகமெல்லாம் சங்கார காலத்தி லொடுங்குமிடம் என்பதும், அச்சுடுகாட்டில் இறைவன் உயிர்களை இளைப்பாறச் செய்தற்கும், உயிர்களினுடைய வினைமலம் பரிபாக மடைதற்கும், அவற்றின் மாயா உடல்களைச் சங்காரம் செய்கின்றான் என்பதும், இறைவன் மதுரையிலுள்ள திருவாலவாயில் அந்நகரிலுள்ள மக்களும் பிறஇடங்களிலிருந்து வருகிற மக்களும் தன்னைத் தொழுது உய்தற்காகச் சிவலிங்கவடிவாய் வீற்றிருக்கின்றான் என்பதும் அறிவார்கள்.

கூடகம் முன்கை மடந்தைமார்கள் துணைவரொடும் தொழுது ஏத்திவாழ்த்த ஆலவாயின்கண் அமர்ந்தவாறு என்றதனாலே, இறைவன் ஏன் திருவாலவாயிலில் வீற்றிருக்கின்றான் என்ற விடை வெளிப்படையாய்க் கூறப்பட்டிருத்தலறிக.

இந்தப் பாட்டில் இறைவன் சங்காரத் தொழில் செய்தற்குச் சுடுகாட்டில் நடனம் ஆடுகிறான் என்பதும், உயிர்களைக் காக்கும் தொழில் செய்தற்கு அவர்கள் வாழும் உயிர்களின் நடுவே திருக்கோயில்களில் சிவலிங்கவடிவில் வீற்றிருக்கின்றான் என்பதும் கூறப்பட்டன. திருவாலவாய்ப் பதிகம் "வீடலாலவாயிலாய்" என்ற முதற்குறிப்புத் தேவாரப் பாட்டில், "காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில் கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே" என்னும் மூன்றாவது நான்காவது அடிகளின் கருத்து இப்பாட்டில் கூறப்பட்டது. இக்காலத்தில் சைவ சமய உண்மை சிறிதும் அறியாத தமிழ்மக்களில் ஒரு சாரார் கோயில்கள் மக்களுக்கு வேண்டாமென்று கூறுகிறார்கள். இது வருந்தத் தக்கது.